**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - 2023**

-------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (''அதிகாரசபை'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுதொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)ஷ**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது அதிகாரசபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது அதிகாரசபையின் கட்டுப்பாட்டு கம்பனியினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இற்கு முரணாக 07 அதிவேக பாதைகளின் மொத்தமாக ரூபா 4,866.06 மில்லியன் கிரயம் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான பெறுமானத் தேய்வுப் பெறுமதி முறையே ரூபா 92.69 மில்லியன் மற்றும் ரூபா 115.31 மில்லியன் குறைத்து பதியப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 92.69 மில்லியனாலும் முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 115.31 மில்லியனாலும் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | அதிவேக பாதைகளுக்கு 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சேர்த்தல்களானது இந்த அதிவேக பாதைகளை அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு ஆண்டின் இறுதித் திகதியில் தேறப்பட்டிருக்காததுடன் சேர்த்தல்களுக்குரிய பெறுமதி மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிருந்தது. அதற்கிணங்க அப்பெறுமதிகள் 2023 ஆம் ஆண்டில் சேர்த்தல்களாக கணக்கேடுகளில் பதியப்பட்டு உரிய பெறுமானத் தேய்வினை கணித்தல் இடம்பெற்றுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் பந்தி இலக்கம் 80(இ) இற்கு முரணாக 2024 ஆம் ஆண்டின் போது குறைபாட்டு உத்தரவாத காலத்தினை | நடைமுறையற்ற பொறுப்புக்களாக அடையாளங்காணும் பிழைகளைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை | நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | மிகைத்த நிறுத்திவைத்தல் பணம் ரூபா 15.42 மில்லியன் நடைமுறைப் பொறுப்புக்களாக அடையாளங்காணப்படாது நடைமுறையற்ற பொறுப்புக்களாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. மேலும் 59.39 மில்லியன் நிறுத்திவைத்தல் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 29.23 மில்லியனுக்குரிய குறைபாட்டு உத்தரவாத காலத்தினை மிகைக்கின்ற திகதிகள் மற்றும் ஒப்பந்தத்தினை பூர்த்திசெய்த திகதிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எடுக்கப்படுவதுடன் நிறுத்திவைத்தல் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 29.23 மில்லியன் தொடர்பான குறைபாட்டு உத்தரவாத காலத்தினை மிகைத்த நாட்கள் மற்றும் ஒப்பந்தத்தை பூர்த்திசெய்த திகதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தயாரிக்கப்பட்டுள்ளது என மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | அதிகாரசபையின் ரூபா 1,342.07 மில்லியன் கிரயமான 370 வாகனங்கள் மற்றும் ரூபா 56.69 மில்லியன் கிரயமான 107 கட்டிடங்கள் 2021 சனசவரி 01 ஆந் திகதி வரை முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தன. அந்த வாகனங்கள் மற்றும் கட்டிடங்கள் இன்னும் பயன்படுத்தப்பட்டு வந்திருந்த போதிலும் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் அச்சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்காததுடன் அதிகாரசபையின் கணக்கு கொள்கைகளுக்கு இணங்க கிரயம் அல்லது மீள்மதிப்பு வருமானம் நிலையான சொத்துக் கணக்குகளில் வைத்தல் மேற்கொள்ளப்படுகின்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் அதற்கிணங்க மீள்மதிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | நியமம் இலக்கம் 07 இன் பந்தி இலக்கம் 71 இற்கு இணங்க ஒரு சொத்தினை பயனுறுதியான ஆயுட்காலமானது நிறுவனத்திற்கு சொத்துக்களிலிருந்து உள்ள எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டின் அடிப்படையில் வரையறுக்கப்படுவதுடன் அது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிாயமான விடயமாகும். அதனால் சொத்துக்களின் பயன்தரும் ஆயுள்காலம் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை சரிசெய்து எதிர்காலத்தில் தேவையான செம்மையாக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே பந்தி இலக்கம் 92(ஆ) இன் பிரகாரம் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு இன்னும் பயன்படுத்தி வருகின்ற சொத்துக்களின் நியாயப் பெறுமதியை வெளிப்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி மற்றும் சொத்துக்கள்) முகாமைத்துவம் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 04 இன் பிரிவு இலக்கம் 11 இற்கு முரணாக வணிக வங்கிகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் பணத்தில் 05 அதிவேக வீதிகள் மற்றும் ஏனைய செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பெறுமதிக்குரிய 2023 திசெம்பர் 31 வரை காணப்பட்ட ரூபா 29,240 மில்லியன் ஆன வட்டியை உரிய செயற்திட்டங்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மூலம் செம்மையாக்கப்படாது அதிகாரசபையினால் மீளாய்வாண்டிற்காகத் தயாரித்த நிதிக்கூற்றுக்களின் மூலம் சமர்ப்பித்ததன் காரணமாக அத்தொகையால் நடைமுறை வேலைகளின் பெறுமதி மிகை மதிப்பீடு செய்யப்பட்டு வட்டிச் செலவுகள் குறைத்து பதியப்பட்டிருந்தது. | கடனைப் பெற்றுக் கொள்ளுதல் அதிகாரசபைக்கு உரிய உள்நாட்டு வங்கிக்குமிடையே உடன்படிக்கை செய்து மேற்கொள்ளப்பட்டுள்ளதனால் உரிய கடன் அதிகாரசபையின் ஏடுகளில் பதியப்படுதல் வேண்டும். நியமம் இலக்கம் 04 இன் பந்தி இலக்கம் 18 இன் பிரகாரம் கடனைப் பெற்றுக்கொள்ளும் கிரயம் சொத்துக்களின் கிரயத்தில் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்பட வேண்டியதனால் கடன் வட்டி அதிகாரசபையின் கணக்குகளில் நடைமுறை வேலைகளின் (WIP) கீழ் காட்டப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம் உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரிவு இலக்கம் 27 இற்கு முரணாக அதிவேக பாதைகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் முகாமைத்துவ (EOM & M) பிரிவிற்கு மீளாய்வாண்டிற்கு முன்னர் பரிமாற்றம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களினூடாக பெற்ற எனினும் சொத்துக்களை ஒப்படைத்த தரப்பினர், ஒப்படைத்த திகதி மற்றும் பெறுமதியை உறுதியாக அடையாளங்காண்பதற்கு தகவல்கள் இல்லாததன் காரணமாக கணக்குகளின் மூலம் கைவிடப்பட்டிருந்த 10 சொத்து விடயங்களுக்குரிய பெறுமதி ரூபா 4,350.35 மில்லியனான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பு செம்மையாக்கல்களாக பதியப்பட்டிருந்தது. அதற்கிணங்க உரிய பெறுமதியானது கடந்தகால | முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட கட்டிடங்களை மீள்மதிப்புச் செய்ததன் மூலம் கிடைக்கின்ற முழுப் பெறுமதியும் மீள்மதிப்பு ஒதுக்கத்தில் உள்ளடக்குதல் நியமம் இலக்கம் 07 இன் பந்தி இலக்கம் 52 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் சொத்துக்களை மதிப்பீடு செய்தல் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டதனால் முன்னைய ஆண்டு தொடர்பான பெறுமானத் தேய்வு செம்மையாக்கல் நியமம் இலக்கம் 03 இன் பந்தி இலக்கம் 57 இன் பிரகாரம் முன்னைய காலத்திற்குரிய பிழைகளை சரிசெய்தலினை முன்னைய காலப்பகுதிக்குரிய தாக்குதல் | நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செம்மையாக்கலின் மூலம் மூலதன வருமானமாக மூலதன ஒதுக்கத்தின் கீழ் அடையாளங்காண்பதற்குப் பதிலாக மீள்மதிப்பு ஒதுக்கமாக பதியப்பட்டதன் காரணமாக மூலதன ஒதுக்கத்தின் பெறுமதி அத்தொகையால் குறைத்துக் கணிப்பிடப்பட்டு மீள்மதிப்பு ஒதுக்கத்தின் பெறுமதி மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டிற்கான பெறுமானத் தேய்வுச் செலவுகள் முன்னைய ஆண்டு செம்மையாக்கலாகப் பதியப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைச்சாத்தியமற்ற தனால் முன்னைய ஆண்டு தொடர்பான செம்மையாக்கல்களைப் பதிவுசெய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | |
| (ஊ) | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பந்தி இலக்கம் 42 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதிகாரசபையில் காணப்பட்ட 380 வாகனங்களை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நியமம் இலக்கம் 07 இன் பந்தி இலக்கம் 42 இன் மூலம் மீள்மதிப்புச் செய்தல் மற்றும் பந்தி இலக்கம் 27 இன் மூலம் கிரயம் இன்றி அல்லது பெயரளவு பெறுமதிக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை நியாயமான பெறுமதிக்கு அடையாளங்கண்டு கணக்கு வைக்க வேண்டும் என காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க இந்த 380 மோட்டார் வாகனங்களில் 24 வாகனங்கள் 2024 மார்ச் மாதம் நாட்குறிப்பு இலக்கம் 347/J03 இன் மூலம் மீள்மதிப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதியான வாகனங்களையும் மீள்மதிப்புச் செய்து இந்த ஆண்டின் போதே கணக்குகளில் பதிவு செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 58 ஆம் பந்திக்கு முரணாக அதிகாரசபையின் முழுச்சொத்துக்களில் 63 சதவீத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒன்றுக்கு ஒன்று மாற்றமான பயன்தரும் ஆயுள் காலத்துடனான அதிவேக வீதிகளின் மதகுகள், வீதி கரைகள், வீதி மேற்பரப்புக்கள், | அதிவேக வீதி கிரயத்தின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு வீதம் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை வீதிச் சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையின் சொத்துக்கள் மதிப்பீட்டு முறைமை பொடியூலினூடாக | நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) |

| | | | |
|---|---|---|---|
| | வீதி சமிஞ்சைகள் உள்ளடங்கலாக பல்வேறு பிரிவுகளுக்காக தொழில்சார் மதிப்பீட்டின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு வீதத்தினை தீர்மானிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் ஒரே பெறுமானத் தேய்வு வீதத்தின் கீழ் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க அச்சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பயன்தரும் ஆயுள்காலம் ஒன்றுக்கொன்று மாற்றமடைகின்ற பிரிவுகளுக்காக பயன்தரும் ஆயுள்காலத்தினைப் போல பெறுமானத் தேய்வு வீதத்தையும் கணிப்பீடு செய்யக்கூடியதுடன் எதிர்காலத்தில் இந்த முறைமையினூடாக இச்செயற்பாட்டினைப் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஏ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரிவு இலக்கம் 51 இற்கு முரணாக அதிகாரசபையின் 789 கட்டிடங்களில் மீள்மதிப்புச் செய்து கணக்கீடு செய்யப்பட்டிருந்த கட்டிடங்களின் எண்ணிக்கை 560 மாத்திரமாகும். | நியமம் இலக்கம் 07 இன் பந்தி இலக்கம் 51 இற்கு இணங்க சொத்துக்கள் வகுப்பின் மீள்மதிப்பினை குறுகிய காலத்தில் பூரணப்படுத்துவதற்கு மற்றும் மீள்மதிப்பினை நாளதுவரையாக்குவதற்கு உட்பட்டு கட்டிடங்கள் சுழற்சி அடிப்படையில் மீள்மதிப்புச் செய்யப்பட்டதுடன் மீள்மதிப்பிற்கு இன்னும் எஞ்சியுள்ளது 229 கட்டிடங்களாகும். | நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஐ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 09 இன் பந்தி இலக்கம் 15 இன் பிரகாரம் இருப்புக்கள் கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியில் காட்டப்பட வேண்டிய போதிலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத ரூபா 26.68 மில்லியன் கிரயமான வாகன உதிரிப்பாக இருப்பினை அதற்கிணங்க பெறுமதியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நியமம் இலக்கம் 09 இன் பந்தி இலக்கம் 31 மற்றும் 32 இன் பிரகாரம் பரிமாற்றம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள் வாயிலாக பெற்றுக்கொள்ளப்படுகின்ற இருப்புக்கள் விசேட அடையாளங்காணல் முறைமையை பயன்படுத்தி கிரயம் நிர்ணயிககப்படுதல் வேண்டும். அதற்காக நியமிக்கப்பட்ட குழு கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட நிலைமையின் காரணமாக செயற்படவில்லை. அதனால் எதிர்காலத்தில் ஒரு புதிய குழுவினை நியமித்து உரிய சிபாரிசுகளைப் பெற்றுக்கொள்ளல் | நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | |
| (ஒ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 14 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்புபட்ட தரப்பினர்கள் தொடர்பான விபரம் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கை இலக்கம் 2.2 (iv) இன் கீழ் உரிய வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஓ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 38 ஆம் பந்திக்கு முரணாக அதிகாரசபையினால் உரிய வாடிக்கையாளரின் செயற்பாடுகளுக்காக (Client Work) செலவு செய்யப்படுகின்ற செலவுக்கு 20 சதவீத இலாபத்தினை சேர்த்து ரூபா 612.54 மில்லியன் வாடிக்கையார் வருமானம் மீளாய்வாண்டின் போது அடையாளங்காணப்பட்டிருந்தது. | நியமம் இலக்கம் 16 இன் 39 ஆம் பந்திக்கு இணங்க பூர்த்திசெய்யும் கட்டத்தின் மீது ஏதாவது ஒரு திகதியில் நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட கிரயம் ஒப்பந்த கிரயமாக அடையாளங்காணப்பட்ட துடன் பந்தி இலக்கம் 33 இற்கு இணங்க ஒப்பந்த கிரயத்துடன் இலாபமானது பூர்த்திசெய்யப்பட்டுள்ள சமவிகிதத்திற்கான வருமானம் அடையாளங்காணப்பட்டு ள்ளது. | நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம் உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஔ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பந்தி இலக்கம் 72 இற்கு இணங்க காணிகள் தனியான ஒரு சொத்தாக கணக்குவைக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதிவேக வீதிச் செயற்திட்டத்தின் மூலம் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 49,214.5 மில்லியன் கிரயமான காணிகள் தனியான ஒரு சொத்தாக அடையாளங்காணப்பட்டு அதிவேக வீதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய அதிவேக வீதியின் தகவல்களை காணிப் பிரிவின் தகவல் முறைமையில் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) உறுதிப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 100,000 கிலோ மீற்றர் மாற்று வீதிகளை புனரமைக்கும் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரைவாசி பூர்த்திசெய்யப்பட்ட தேசிய வீதிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 147,153 மில்லியன் தொகை நடைமுறை வேலையாக (WIP) அடையாளங்காணப்பட்டிருந்ததுடன் அந்த வீதிகளை முழுமையாக பூர்த்திசெய்ததன் பின்னரான செலவுகள் என பதிவழிக்கப்படுவதாகவும் இதனால் அதிகாரசபையின் மிகைக்கு அல்லது பற்றாக்குறைக்கான தாக்கம் இச்செயற்திட்டத்திற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனை மீண்டும் சொலுத்துவதற்காக பொதுத் திறைசேரியிட மானியங்களை பெற்றுக்கொண்டதன் பின்னர் எதிரீடு செய்யப்படுகின்றது எனவும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க செலவாக பதிவழித்தல் மற்றும் அதுதொடர்பான வருமானம் இரண்டு காலப்பகுதிக்கு அடையாளம் காணுதலானது இணங்கியிருத்தல் கருதுகோளுக்கு முரணானதாகும். | நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டுள்ள பெறுமதியானது தேசிய பெருந் தெருக்களுக்குரியதல்லா த வீதிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயமானதுடன் இந்த வீதிகள் பூரணமாக பூர்த்திசெய்யப்படாததனா ல் செலவுகளாக பதிவழிப்பதற்குரிய செம்மையாக்கல்களானது இக்கணக்கீட்டு கொள்கையை மீளாய்வு செய்து எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள விடயங்களை கணக்கீட்டு கொள்கைகளின் மூலம் திருத்துவதற்கு உட்படுத்தாதிருத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) அதிகாரசபையின் A மற்றும் B தரங்களுக்குரிய பெருந்தெருக்களின் முழுத்துாரத்தின் அளவு 12,225 கிலோ மீற்றர்களாக இருந்த போதிலும் தேசிய பெருந்தெருக்களை மூலதனமாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 285 வீதிகளுக்குரிய 3,267 கிலோமீற்றர்கள் மாத்திரம் மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அதிகாரசபையின் A மற்றும் B தரங்களுக்குரிய | இலங்கை வீதிச் சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையின் மூலம் மிகுதியாக உள்ள வீதிகளை மூலதனமாக்கும் நடவடிக்கை 2024 ஆம் ஆண்டின் போது 2000 கிலோ மீற்றர்களும் 2025 ஆம் ஆண்டின் போது 4000 கிலோ மீற்றர்களும் 2026 ஆம் ஆண்டின் போது 5500 கிலோ மீற்றர்களாகவும் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | தேசிய பெருந்தெருக்களை மூலதனமாக்குவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழ் மீளாய்வாண்டின் போது இத்துறை சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தி தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி எழுத்துமூல |

| | | | |
|---|---|---|---|
| | 8958 கிலோமீற்றர் தூரத்திற்கான பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது கலைக்கப்பட்ட 03 செயற்திட்டங்களின் மூலம் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 24,331.83 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது பின்னோக்கிய செம்மையாக்கல்களாக பதியப்படாது மீளாய்வாண்டின் மூலதன மானிய பெறுவனவாக கணக்கீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான பரிமாற்றம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெற்ற வருமானம் (Revenue from Non exchange Transactions) மற்றும் நிலையான சொத்துக்கள் அப்பெறுமதியால் அதிகரித்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | மத்திய அதிவேக வீதி II செயற்திட்டத்திலிருந்து பெற்ற தகவல்களின் அடிப்படையில் அக்கிரயத்தில் ஒரு பகுதி 2022 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த மூன்று செயற்திட்டங்களும் 2022-12-31 ஆந் திகதி காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது சொத்துக்கள் அதிகாரசபையினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதனால் இச்சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது பெற்ற சொத்துக்களாக கருதி கணக்கீடு செய்யப்பட்டது. | அதிகாரசபையின் சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி) நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | அதிகாரசபையினால் வீதி பராமரிப்பு மற்றும் ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக 2015 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்துகின்ற ரூபா 100.15 மில்லியன் கிரயமான 11 கணனி தகவல் முறைமைகள் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த கணனி தகவல் முறைமைகள் இலங்கை வீதிச் சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையின் உப முறைமை ஆனதுடன் அவை பல்வேறு குறிக்கோளினூடாக நாளதுவரையாக்கப்பட்டுள்ளதுடன் உரிய விபரத்தை பெற்றுக்கொண்டதன் பின்னர் எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரசபையின் தகவல் முறைமை முழுமையாகவும் சரியாகவும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதற்கு மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி) நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் சான்றுபடுத்துதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது பெற்ற மூலதனத் தன்மையான அரசாங்க மானியம் (Government Capital Grant) ரூபா 101,285.66 மில்லியன் தொகை மீண்டுவரும் மானியமாக (Recurrent Grant) கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியால் மூலதன மானியம் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டு | நேரடியாக மூலதனத் தன்மையான மானியமாக அடையாளங்காணக்கூடிய மானியம் மாத்திரம் மூலதனத்தன்மையான மானியமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவ்வாறு இல்லாத மானியம் வருமான மானியமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | அரசாங்க மானியம் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதற்கு மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி) நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் சான்றுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமான ஒதுக்கீடு மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டது. | எவ்வாறாயினும் மானியங்களை முறைப்படியாக மீளாய்வு செய்து தேவையான சரி செய்தல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகள் மற்றும் வரிசை அமைச்சின் கட்டுநிதியை விடுவிக்கும் பதிவேட்டிற்கு இணங்க 04 விடயங்கள் தொடர்பாக அரசாங்க மானியத்தின் பெறுமதியில் ரூபா 15,829.43 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது. | இந்த வித்தியாசத்திற்கான பிரதான காரணமாவது பிணை முறிகளின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 39,956.9 மில்லியன் தொகை ஆண்டிற்காக பெற்ற பெறுவனவுகளாக பதியப்படுவதுடன் இச்செலவுத் தலைப்பிற்கு கிடைக்கின்ற பணம் மூலதனப் பெறுவனவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதுடன் ஆண்டின் போது பெற்ற முழுப் பெறுவனவுகளின் மொத்தம் ரூபா 93,552.57 மில்லியனாகும். | நிதிக்கூற்றுக்களைச் சான்றுபடுத்துவதற்கு முன்னர் வரிசை அமைச்சின் தகவல்களுடன் ஒப்பீடுசெய்து சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி) நிதி கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் சான்றுபடுத்துதல் வேண்டும். |
| (ஊ) | அதிகார சபையினால் பெற்றுக்கொண்ட கடனுக்காக 02 உள்நாட்டு வங்கிகளுக்கு மீளாய்வாண்டு தொடர்பாக மொத்தமாக ரூபா 9.42 மில்லியன் தண்டப்பண வட்டி செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகையினுள் உள்ளடக்கப்பட்ட ரூபா 5.97 மில்லியன் மீளாய்வாண்டிற்கான செலவுகளாக செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான மிகை மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டு செலுத்த வேண்டிய வட்டிச் செலவுகள் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய வங்கியுடன் கலந்துரையாடி அந்த தண்டப்பன வட்டியை நீக்கிக்கொள்வதற்கு முயற்சி எடுத்தனால் வட்டிக்காக ஒதுக்கீடு செய்தல் அல்லது வெளிப்படுத்துதல் மேற்கொள்ளப்படாதிருந்த துடன் இறுதியில் வங்கியுடன் உடன்படிக்கை செய்துகொண்ட முறைமைக்கு இணங்க அந்த தண்டப்பண வட்டியை செலுத்த வேண்டி ஏற்பட்டது. | தண்டப்பண வட்டியை செலுத்துவது தொடர்பான தொடக்க புலனாய்வினை மேற்கொண்டு குறைத்துக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளங்கண்டு ஒழுக்கற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | மகனெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 6426 கி.மீற்றர் வீதிகளை புனரமைத்தல் திருத்தம் செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக செலவு செய்த ரூபா 3,810 மில்லியனையும் உள்ளடக்கி வீதி அபிவிருத்தி அதிகாரபைக்குரியதல்லாத | எதிர்காலத்தில் இக்கணக்ககீட்டு கொள்கையை மீளாய்வு செய்து தேவையான செம்மையாக்கல்கள் மேற்கொள்வதுடன் 2023 ஆம் ஆண்டின் போது நடைமுறை வேலைகளாகப் பதியப்பட்டுள்ள தொகையை | தேசிய பெருந்தெருக்களுக்குரிய தல்லாத வீதிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை குடியரசுக் கணக்குகளின் மூலம் தவிர்ப்புச் செய்யப்படாத வகையில் கணக்கு வைக்கப்படுகின்றது என்பதனை மேலதிக பணிப்பாளர் |

| | | | |
|---|---|---|---|
| | வீதிகளை புனரமைப்புச் செய்வதற்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலவு செய்த (2020,2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுளில்) ரூபா 147,153 மில்லியன் நடைமுறை வேலைகளின் கீழ் (Work in Progress) பதிவுசெய்யப்பட்டிருந்தது. | செலவுகளாகப் பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டதனால் சொத்துக்கள் குடியரசுக் கணக்குகளிலிருந்து விட்டுவிடுதல் இடம்பெறவில்லை. | நாயகத்தினால் (நிதி) நிதிக்கூற்றுகளில் கையொப்பமிடுவதற்கு முன்னர் சான்றுபடுத்துதல் வேண்டும். |
| (ஏ) | 2020, 2021, 2022 மற்றும் மீளாய்வாண்டு ஆகிய ஆண்டுகளின் போது பல்வேறு உள்நாட்டு / வெளிநாட்டு நிதி மூலங்களின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட 09 செயற்திட்டங்களால் அதிகாரசபைக்கு ஒப்படைக்கபட்டிருந்த மொத்தமாக ரூபா 22,587 தொகையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட் டிருக்கவில்லை. | தகவல்களைப் பெற்றதன் பின்னர் கணக்கீடு செய்யப்படும். | செயற்திட்டங்கள் முடிவடைந்ததன் பின்னர் சொத்துக்களை ஒப்படைத்தலினை கணக்கீடு செய்வது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். முறையற்ற வகையில் ஒப்படைத்த மற்றும் பொறுப்பேற்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | புதிய களணி பாலம் செயற்திட்டம் தொடர்பாக ரூபா 220.36 மில்லியனான ஏனைய சொத்துக்களின் பெறுமதியை உரிய சொத்துக்கள் தொகுதியின் கீழ் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 220.36 மில்லியன் தொகையான ஏனைய சொத்துக்கள் 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் அதிகாரசபையின் கணக்குகளுக்கு நியமம் இலக்கம் 07 பந்தி இலக்கம் 27 இற்கு இணங்க கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | அதிகார சபையின் சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதற்கு மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி) நிதிக் கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் சான்றுபடுத்துதல் வேண்டும். |
| (ஒ) | வீதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மேற்கொள்ளும் போது சுவீகரிக்கப்பட்ட காணிகள தொடர்பாக 38(அ) இலக்க வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து இழப்பீட்டு பணத்திற்குரிய முதலாவது இழப்பீட்டு கொடுப்பனவு மேற்கொண்ட | பிரதேச செயலகங்களின் உரிய இழப்பீடு மற்றும் வட்டிப் பணம் 38(அ) ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க தயாரித்து வேண்டப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க செலுத்த வேண்டிய நியதிச்சட்ட இழப்பீட்டுப் பணமும் | ஒவ்வொரு கட்டங்களிலும் தொடர்புடுத்துகின்ற உத்தியோகத்தர்களின் பொறுப்பு மற்றும் பேணப்பட வேண்டிய அறிக்கைகளானது நிர்ணயிக்கப்பட்டதற்கு இணங்க காணிகளைச் சுவீரித்தல், இழப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரை 07 சதவீத வருடாந்த வட்டி உரிய இழப்பீட்டிற்கு தகைமையுள்ளவருக்கு செலுத்துதல் வேண்டும். எனினும் அதிகாரசபையின் காணிப்பிரிவிற்கு இழப்பீடு மற்றும் இழப்பீட்டுப் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற வவுச்சர்கள் தொடர்பாக மாத்திரம் செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பணமும் வட்டியும் அடையாளங்காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியுள்ள முழு நியதிச்சட்ட இழப்பீட்டுப் பணமும் அது தொடர்பான வட்டியும் அதிகாரசபையினால் அடையாளங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வட்டியும் இனங்காண்தல் இடம்பெறுகின்றது. எவ்வாறாயினும் இன்றுவரை 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது அதிக அளவான இழப்பீட்டுப் பணம் செலுத்தி பூர்த்திசெய்யப்பட்டுள்ளதனால் மிகுதியாக செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பணமும் வட்டியும் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்து. | மற்றும் கொடுப்பனவு தொடர்பான நடைமுறையை தயாரித்து பின்பற்றுதல் வேண்டும். |
| (ஓ) | கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதி தொடர்பாக தெலங்கபான பொலிஸ் நிலைய கட்டிடத்துடன் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 13.55 மில்லியன் கிரயமான உணவுச்சாலை (Canteen) கட்டிடம் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது உரிய கட்டிடத்தின் மீள்மதிப்பு பெறுமதி 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் கணக்கீடு செய்யப்பட்டு சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. | அதிகார சபையின் சொத:துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதனை மேலதிகப் பணிப்பார் நாயகத்தினால் (நிதி) நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் சான்றுபடுத்துதல் வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டில் மத்திய அதிவேக வீதிச் செயற்திட்டம் - கட்டம் II செயற்திட்டம் தொடர்பான பெறுமானத் தேய்வு பெறுமதி 1,371.02 மில்லியனாக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 1,660.14 மில்லியனாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 289.12 மில்லியனால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | மூன்று மாதங்களுக்கான பெறுமானத் தேய்வு கணக்குகளில் பதியப்பட்டுள்ளதுடன் அது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சரி செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதனை மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி) நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் சான்றுபடுத்துதல் வேண்டும். |
| (க) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட பிற்போட்ட சொத்துக்களின் (Deferrend | பிற்போட்ட சொத்துக்களின் பெறுமதியை தனியான ஒரு விடயமாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் | நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | assets) பெறுமதி ரூப 172.65 ஆனது கடன்பட்டோர் பெறுமதியின் கீழ் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக கடன்பட்டோர் பெறுமதியானது அத்தொகையால் அதிகரித்து காட்டப்பட்டிருந்ததுடன் பிற்போட்ட சொத்துக்கள் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனை மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) சான்றுபடுத்துதல் வேண்டும். |
| (கா) | வெளிநாட்டுக் கடன் மற்றும் உள்நாட்டு வணிக வங்கி கடனின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களின் தேவைப்பாட்டிற்காக கொள்வனவு செய்த மற்றும் செயற்திட்டங்களுக்கிடையே பரிமாற்றம் செய்கின்ற பொருள் பதிவேட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டிய சொத்துக்களானது கொள்வனவு செய்த மற்றும் பரிமாற்றம் செய்த சந்தர்ப்பத்திலேயே அதிகாரசபையின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் நாளதுவரையாக பதிவு செய்யப்படுகின்ற நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்காமையால் 17,883 அலகு சொத்துக்கள் பெறுமதி கணிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்கள் முடிவடைந்ததன் பின்னரே சொத்துக்கள் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்படுவதுடன் செயற்திட்டம் சொத்துக்களை ஒப்படைப்பது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள 216 மற்றும் 250 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கைக்கு இணங்க உரிய சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட முறைமையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்குவதற்காக சரியான படிவம் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) சான்றுபடுத்தல் வேண்டும். |
| (கி) | தொழிலுக்குப் பிந்திய நலன்களின் (Post Employment Benefit) பெறுமதியை கணிப்பீடு செய்வதற்காக ஈடுபடுத்தப்படுகின்ற எதிர்கால சேவைக் காலத்தினை கழிவு செய்யும் போது இடம்பெற்ற குறைபாட்டின் காரணமாக அதிகாரசபைக்குரிய பணிக்கொடை செலவு ரூபா 344.48 மில்லியனால் குறைத்தும் அதிவேக வீதி செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ பிரிவு தொடர்பான பணிக்கொடை செலவு ரூபா 35.05 மில்லியன் அதிகரித்தும் பதியப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை செலவு ரூபா 309.43 மில்லியனால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டிற்கான மிகை | எதிர்கால சேவைக் காலத்தை கழிவு செய்யும் போது ஏற்பட்ட தவறுகளை சரிசெய்தல் 2024 ஏப்ரல் மாதம் நாட்குறிப்பு இலக்கம் 079/J04 இன் மேற்கொள்ளப்பட்டது. | சேவைக்கு பிந்திய பிரதிபலன்களானது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இற்கு இணங்க கணக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதனை மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) அவர்களினால் சான்றுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அத்தொகையால் அதிகரித்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (கீ) | அதிகாரசபையின் 04 வீதிகள் மற்றும் ஒரு பாலத்தினை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பாக 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான நடைமுறை வேலைகளின் (WIP) பெறுமதியின் கீழ் 383.98 மில்லியன் பதிவுசெய்யப்பட்டிருந்தும் அந்த வீதி மற்றும் பாலத்திற்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 147.16 மில்லியன் தொகையான அபிவிருத்திச் செலவுகள் ஆண்டிற்கான செலவுகளாக நிதி செயலாற்றல் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் மற்றும் நடைமுறை வேலைகளின் பெறுமதி அத்தொகையால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இச்செலவுகள் முற்தேவைப்பாடுகளை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவானதுடன் அந்த வீதி தொடர்பாக தேடிப்பார்த்து அவற்றினை நடைமுறை வேலைகளின் பெறுமதியின் கீழ் பதிவுசெய்வதற்கு நடவபடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்கான செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதனை மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) அவர்களினால் சான்றுபடுத்துதல் வேண்டும். |

**1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | | |
| (அ) | அதிகாரசபையினால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கடன்ட்டோர் மீதி ரூபா 45,615.18 மில்லியன் மற்றும் கணக்காய்விற்காகச் சமர்ப்பித்த பட்டோலைகளில் (Sehedule) உள்ளடக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் மொத்தம் ரூபா 48,563.77 மில்லியனாக இருந்ததன் காரணமாக உரிய | 45,615.18 | 48,563.77 | 2,948.59 | பட்டோலைகளின் பெறுமதி சரியானதுடன் பின்னிணைப்பு 07 இல் குறிப்பிட்ட பட்டோலைகளின் பெறுமதி சர0யானதாக இருத்தல் வேண்டும். | சொத்துக்களின் பட்டோலைகள் சரியானவை என்பதற்கு மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி) நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் சான்றுபடுத்துதல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மீதிகளுக்கிடையே ரூபா 2,948.59 வித்தியாசம் காணப்பட்டது. | | | | | |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் அதிவேக வீதியின் கீழ் மூலதனமாக்கப்பட்ட காணிகளை சுவீகரிக்கும் செலவு ரூபா 49,212.91 மில்லியனாக இருந்ததுடன் காணிப் பிரிவினால் பேணப்பட்ட தகவல்களின் பிரகாரம் அச்செலவுகள் ரூபா 32,368.75 மில்லியனாகும். அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களுக்கும் காணிப் பிரிவினால் பேணப்பட்டு வந்த தகவல்களுக்குமிடையே ரூபா 16,844.16 வித்தியாசம் காணபபட்டது. | 49,212.91 | 32,368.75 | 16,844.16 | உரிய அதிவேக வீதியில் தகவல்களை காணிப்பிரிவின் தகவல் முறைமையில் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதிக்கூற்றுக்களைத் தாயாரிப்பதற்கு முன்னர் துணை அறிக்கைகளை ஒப்பீடு செய்வதற்கு உட்படுத்துதல் வேண்டும். |

### 1.5.5 திரண்ட நிதி கூற்றுக்களைத் தயாரித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அதிகாரசபை அதன் துணைக்கம்பனியின் நிதிக் கூற்றுக்களை ஒருங்கிணைத்து தொகுதி தொடர்பான திரண்ட நிதிக்கூற்றுக்களை தயாரித்திருக்கவில்லை. | துணைக்கம்பனியின் நிதிக்கூற்றுக்களை ஒருங்கிணைத்து தொகுதி தொடர்பான திரண்ட நிதிக்கூற்றுக்களை தயாரித்திருக்காமை சம்பந்தமான விடயங்கள் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 2.2 இல் காட்டப்பட்டுள்ளது. | தொகுதியின் கணக்கு கொள்கையுடன் இணங்குகின்ற நிதிக்கூற்றுக்களை துணைக் கம்பனிகள் தயாரித்தல் வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையினால் ஒப்பந்த | வேலைகளை ஆயத்தப்படுத்தல் | அந்த தகவல்களை உரிய பிரிவிடமிருந்து | உரிய பட்டோலைகள் தயாரிக்கப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 41,691.68 தொகையான வேலைகளை ஆயத்தப்படுத்தல் முற்பணம் | முற்பண பிணைகள் காலாவதியாகும் திகதி, ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்காக வேண்டிக்கொண்ட திகதி, ஒப்பந்த காலத்தை நீடிப்பதனை அங்கீகரித்த திகதி. | பெற்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | என மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த ஆவணங்களை கணக்காய்விற்கு வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | மகனெகும இமல்சன் கம்பனியின் 99 சதவீதமான நேரடி கட்டுப்பாட்டு தகமை | 99 சதவீத நேரடி கட்டுப்பாட்டு தகமைக்குரிய பங்குச் சான்றிதழ் | இக்கம்பனி தற்பொழுது கலைத்தல் செயற்பாட்டில் காணப்படுவதுடன் தகமை தொடர்பான சிக்கலை தீர்த்துவைப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | மகனெகும இமல்சன் கம்பனியின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ரூபா 3,424.45 பெறுமதியான கட்டிடங்கள் இயந்திரங்கள், கணனிகள், மனைப் பொருட்கள் என்பன | கொள்வனவு செய்த/ பொறுப்பேற்ற திகதி | ரூபா 199.07 மில்லியனான இயந்திரங்கள் 2023 நவம்பர் மாதம் மீளமதிப்பு செய்யப்பட்டதுடன் திகதி குறிப்பிடப்படாத அனைத்து சொத்துக்களும் 2023 ஆம் ஆண்டளவில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளது. | சொத:துக்களை கொள்வனவு செய்த / பொறுப்பேற்ற திகதி தொடர்பான விபரம் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஈ) | பெருந்தெருக்கள் திணைக்களத்தினை முடிவுறுத்தும் போது அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட ரூபா 525.01 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் | சொத்துக்கள் பதிவேடு | இதற்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர் ஒப்படைக்கப்பட்ட உரிய சொத்துக்கள் சம்பந்தமான விபரம் (கட்டிடங்களைத் தவிர்த்து) அதிகாரசபையிடம் இல்லை. | உரிய சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது என்பதற்கு மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்) உறுதிப்படுத்த வேண்டிய அப்பதிவேட்டினை கணக்காய்விற்கு வழங்குதல் வேண்டும். |
| (உ) | வீதிகளை விரிவுபடுத்தல்களும் மேம்படுத்துதல்களும் அபிவிருத்திச் செலவுக் | கணிப்பீடு செய்த முறைமையை காட்டும் மூல ஆவணங்கள் மற்றும் உரிய செலவுகளையும் இக்கணக்கின் கீழ் | காலாண்டு ரீதியான முன்கூட்டிய விற்பனைகளுக்கும் முன்கூட்டிய உற்பத்திச் செலவுகளுக்குமிடையேயான வித்தியாசம் | உரிய மூல ஆவணங்களை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். மூல ஆவணங்களைத் தயாரிக்காது |

| | | | |
|---|---|---|---|
| கணக்கிற்கு வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 437.35 மில்லியன் பெறுமதி | காட்டுவதற்கு காரணமாக விடயங்கள். | உரிய செலவுத் தலைப்புடனான செம்மையாக்கல் இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது. | நாட்குறிப்பு வவுச்சர்களை அங்கீகரித்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2006 பெறுகை வழிகாட்டிக் கோவைக்காக 2017 மார்ச் 15 ஆந் திகதி வழங்கிய 32 ஆம் இலக்க பின் இணைப்பிற்கு (Supplement -32) முரணாக அதிலட காட்டப்பட்டுள்ள வரம்புகளை மிகைத்து 2020 ஆம் ஆண்டின் போது 16 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 19.49 மில்லியன் பணமும் 2021 ஆம் ஆண்டின் போது 15 உத்தியோகததர்களுக்கு ரூபா 4.49 மில்லியன் தொகையுமாக மொத்தமாக ரூபா 24.38 மில்லியன் பெறுமதி படியாக செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை இன்னும் அறவிட வேண்டிய தொகை ரூபா 6.14 மில்லயனாக இருந்தது. | 100,000 கிலோ மீற்றர் வீதிச் செயற்திட்டம் தொடர்பான பெறுகை நடவடிக்கைகளுக்காக இன்றுவரை உரிய உத்தியோகத்தர்களுக்கு காலாண்டில் கொடுப்பனவு செய்யக்கூடிய உச்ச அளவு எல்லையை மிகைத்து கொடுப்பனவு செய்யப்படாததுடன் மிகையாக செலுத்திய பணத்தை உரிய அங்கத்தவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 அம் பிரிவின் பிரகாரம் கொடுப்பனவுகளை அங்கீகரித்து சான்றுபடுத்திய மற்றும் கொடுப்பனவு செய்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மொத்தமாக ரூபா 45,615 மில்லியனான கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 124.84 மில்லியன் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் ரூபா 420,288 மில்லியன் 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் ரூபா 0.71 மில்லியன் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் மீதியில் ரூபா 1,265 மில்லியன் 2024 ஏப்ல் மாதத்தில் அறவிடப்பட்டுள்ளதுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் முதலீட்டு சபையிடமிருந்து கிடைக் வேண்டிய தொகையான ரூபா 430 மில்லியன் அறவிடப்படாது காணப்பட்டது. 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பணத்தை செலுத்தாத நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் உரிய வழக்கு இதுவரை முடிவடைந்திருக்கவில்லை | கிடைக்க வேண்டிய காசு மீதி தொடர்பாக கடன்பட்டோர்களிடமிருந்து உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தாத மீதிகளுக்குரிய சேவை நடைமுறைகளை மீறிய வழங்கல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள மொத்தமாக ரூபா 568.31 மில்லியனான கடன்கொடுத்தோர் மீதியில் அடங்கியுள்ள ரூபா 30.91 மில்லியன் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாகவும் ரூபா 5.9 மில்லியன் 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் ரூபா 6.08 மில்லியன் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 30.91 மில்லியனில் உள்ளடங்கியுள்ளதானது மிரிஜ்ஜவில தொழிற்சாலையின் வழங்குனர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 8.7 மில்லியனும் அடுத்துவரும் ஆண்டுகள் தொடர்பாக அடுத்துவரும் ஆண்டுகள் தொடர்பாக கிடைத்துள்ள ரூபா 1.2 மில்லியன் தொகையான வாடகைப் பணமும் இழப்பீட்டுப் கொடுப்பனவுக்காக NKB செயற்திட்டத்திடமிருந்து கிடைத்துள்ள ரூபா 16.3 மில்லியனையும் உள்ளடக்கி நானாவித கடன்கொத்தோர்களின் மீதிகளாகும். 5 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகக் காணப்பட்ட ரூபா 5.9 மில்லியன் அடுத்துவரும் ஆண்டுகள் தொடர்பாக கிடைத்துள்ள வாடகைப் பணமாகும். 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்துவைக்கப்படாது காணப்பட்டவை வீதிப் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களின் கைவிடப்பட்ட வட்டிக் கொடுப்பனவாகும். | உரிய சேவைகளை வழங்குதல் மற்றும் அது தொடர்பான நடைமுறைகள் பின்பற்றப்பட்டதன் பின்னர் கடன்கொடுத்தோர் அடையாளங்காணப்பட்டனர் எனவும் செலுத்த வேண்டிய மீதிகள் முறைப்படியான வகைப்படுத்தலுடன் அறிக்கையிடப்பட்டுள்ளது எனவும் உரிய முறைப்படி பதிவழித்தலும் ஒதுக்கீடு செய்தலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி) நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் சான்றுபடுத்துதல் வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) பந்தியின் கீழே மீளாய்வாண்டின் போது இத்துறை சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தி தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலிவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு | அரசாங்க விடுமுறை தினத்தில் வேலை செய்வதற்கான விடுமுறை தினக் கொடுப்பனவு சம்பந்தமாக தாபன விதிக் கோவையில் உள்ளடக்கப்படாத விடயங்களை தாபன பணிப்பாளரிடம் விசாரிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாது அலுவலக சேவைக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களையும் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் அலுவலக நேரங்களின் பின்னர் சேவையில் ஈடுபடுத்திய மணித்தியாலங்களின் மொத்தம் கணிக்கப்பட்டு 08 மணித்தியாலங்களுக்கு ஒரு விடுமுறை தின கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்கு இணைத்துக்கொள்ளப்பட்டு சேவையாற்றுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு 2023 சனவரியிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 13.18 மில்லியன் விடுமுறை தின படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | 2012-02-01 ஆந் திகதி அதிகாரசபையின் நிருவாக கட்டளை இலக்கம் 01 இன் மூலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பதில் கடமை பார்க்கும் பணிப்பாளர் நாயகத்தினால் 08 மணித்தியாளலங்களுக்கு மிகையாக வேலை செய்கின்ற மணித்தியாலங்களின் எண்ணிக்கையை கூட்டி 08 மணித்தியாலங்களுக்கு ஒரு விடுமுறை தினக் கொடுப்பனவு என்பதாக கணித்து ஒரு மாத்திற்கு உச்ச அளவாக 15 நாட்களுக்கு கொடுப்பனவு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | சட்டரீதியற்ற கொடுப்பனவுகளை அறவீடு செய்தல் வேண்டும். பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1995 யூலை 21 ஆந் திகதி சனாதிபதி செயலகம் வழங்கிய அரசாங்க காணிகளை ஒப்படைப்பது | உடன்படிக்கையின் நிபந்தனையாக 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை குத்தகை வாடகை திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக தெற்கு | மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருடாந்த பெயரளவு குத்தகை வாடகையான ரூபா | காணிகளை ஒப்படைத்தல தொடர்பான வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்களை மீறிய உத்தியோகத்தர்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 07 மற்றும் 08 ஆம் பிரிவுகள் | அதிவேக வீதியின் வெலிப்பனை சேவை் இல்லத்தின் உணவுச்சாலை மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையத்தை செயற்படுத்துவதற்காக 04 காணித்துண்டுகள் 30 ஆண்டுகள் காலத்திற்கும் 99 ஆண்டுகள் காலத்திற்கும் குத்தகை அடிப்படையில் 02 தனியார் கம்பனிகளுக்கு வருடாந்த குத்தகை வாடகை ரூபா 10,000 வீதம் ஆன 03 உடன்படிக்கைகளின் மூலம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | 10,000 மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் காணித்துண்டு இலக்கம் 01 மற்றும் இலக்கம் 09 இற்காக 30 ஆண்டுகளுக்கும் காணித் துண்டுகள் இலக்கம் 04 மற்றும் 06 இற்காக 99 ஆண்டுகளுக்குமாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது டன் அதற்காக அவர்களிடமிருந்து ஒரே தடவையில் உரிய பணம் இலங்கை இன்சுவரன்ஸ் ரிசோட் (தனியார்) கம்பனியிடமிருந்து ரூபா 21,800,000 தொகை 2013-02-13 ஆந் திகதியும் கெனோவின் ஹோட்டல் என்ட் ஸ்பாஸ் (தனியார்) கம்பனியிடமிருந்து ரூபா 2,924,905 தொகை 2014-01-29 ஆந் திகதியும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | ளை அடையாளங்கண்டு தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVII அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பின்னிணைப்பு II இன் பந்தி இலக்கம் 04 | திணைக்களத்தின் கட்டளைகளுக்கு மற்றும் வழிகாட்டிகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட ஆட்சேர்பபு மற்றும் பதவியுயர்வு நடைமுறையினை தயாரிப்பதற்கு உட்பட்டு அத்திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆளணியினரை மீளமைப்புச் செய்யும் சிபாரிசினை அமுல்ப்படுத்தாது அதிகார சபையினால் சேர்த்துக்கொள்ளப்பட்ட 114 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து இந்த சம்பள அளவுத் திட்டம் தொடர்பான அங்கீகாரம் இன்னும் வழங்கப்பட்டிருந்தது டன் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அல்லது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் | பிரதான கணக்கீட்டு உத்தியொகத்தரினால் இது தொடர்பாக பரீட்சிப்புக்ககளை நடாத்தி அங்கீகாரமின்றி உயர்ந்த சம்பளஅளவுத் திட்டத்தில் அமர்த்துவதற்கு உரிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபனவிதிக் கோவையின் II |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்த MM 1-3 சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்க சம்பளப் பெறுமதிக்கு பதிலாக HM சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்தியதன் காரணமாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 437.89 மில்லியன் மேலதிக தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | மூலம் இச்சம்பள குறியீட்டின் சம்பளத்தை பெற்றுக்கொள்கின்ற உத்தியோகத்தர்களுக்கு உள்ளக ரீதியாக தகமை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பதவியுயர்வினைப் பெற்றுக்கொள்ளும் போது தானாகவே தீர்த்துவைக்கப்பட்டது. | ஆம் தொகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உரிய நியமனங்களை அங்கீகரித்த, சம்பள கொடுப்பனவை அங்கீகரித்த உத்தியோகத்தர்களின் மூலம் மிகைக் கொடுப்பவை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ii) | 2006 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 28(11) ஆம் இலக்க சுற்றறிக்கை | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்த ஊழியர் அளவினை மிகைத்து சேர்த்தக்கொள்ளப்பட்ட 857 உத்தியோகத்தர்களுக்கு 2023 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையினால் ரூபா 309.7 மில்லியன் பணம் சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர் தேவைப்பாட்டின் அடிப்படையில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்பபின் காரணமாக 2023 ஆம் ஆண்டின் இறுதித் திகதியில் (2023-12-31 ஆந் திகதியில்) 856 மிகைப் பதவியணியினர் காணப்பட்டனர். | உரிய நியமங்களை அங்கீகரித்த சம்பளக் கொடுப்பனவை அங்கீகரித்த உத்தியோகத்தர்களின் மூலம் மிகைக்கொடுப்பனவு அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (iii) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க சுற்றறிக்கை | உத்தியோகத்தர்கள் அங்கீகரித்த சம்பளத்திற்கு மேலதிகமாக ஏதாவது படியினை பெற்றுக்கொள்வதாயின் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்தும் சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவிடமிருந்தும் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 2016 மார்ச் 28 ஆந் திகதிய 1698/2016 ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் | ஒவ்வொரு தொழில்சார் தொழில் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்ட தொழில்சார் நிறுவனம் சார்ந்த அங்கத்துவம் வகிக்கின்ற நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அதிகாரசபையினால் தொழில்சார் படிகள் செலுத்தப்பட்டிருந்த | அங்கீகரிக்கப்படாத படிக் கொடுப்பனவுகளை அங்கீகரித்த உத்தியோகத்தர்களிடமிருந்து மேலதிக கொடுப்பனவுகளை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அடிப்படையில் மாத்திரம் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு தொழில்சார் படியும் அதிகாரச்சபை படியும் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது 382 ஊழியர்களுக்கு ரூபா 110.59 மில்லியன் உள்ளடங்கலாக 2016 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை ரூபா 736.46 மில்லியன் தொழில்சார் படியாகச் செலுத்தப்பட்டிருந்துடன் மீளாய்வாண்டின் போது 6794 ஊழியர்களுக்கு ரூபா 1,042.61 மில்லியன் உள்ளடங்கலாக 2019 இலிருந்து 2023 வரை ரூபா 5,232.61 ‘‘வீதி அபிவிருத்தி அதிகார சபை படியாக’’ செலுத்தப்பட்டிருந்தது. | ன. வீதி அபிவிருத்தி அதிகாரசபை படியானது கூட்டு உடன்படிக்கையை மேற்கொள்ளும் போது பொதுத்திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு படியானதுடன் அதிலிருந்து நீங்கிகொள்ளும் போதும் உரிய சலுகைகள் அவ்வாறே காணப்படுகின்றது என்பதனை தீறைசேரி செயலாளர் இணங்கிகொண்டுள்ளார் என அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தொழில்சங்கத்திற்கு தெரிவித்துள்ளார். | |
| (ஈ) | 2006 தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவை | | | | |
| | (i) | 8.9.3 ஆம் பிரிவு | ரூபா 100 மில்லியனிலிருந்து ரூபா 500 மில்லியன் வரையான ஒபபந்தங்கள் அமைச்சின் செயலாளர் அல்லது வரிசை அமைச்சின் செயலாளரினால் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தால் மேலதிக செயலாளரினால் கையொப்பமிடக்கூடியதாக இருந்த போதிலும் அதற்கு முரணாக 100,000 கிலோ மீற்றர் வீதிச் செயற்திட்டத்தின் கீழான ஒப்பந்த உடன்படிக்கைகளில் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் கையொப்பமிடப்பட்டிருந்தது. | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் ஒப்பந்த பெறுமதி ரூபா 250 மில்லியன் வரையான உடன்படிக்கைகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினாலும் ஒப்பந்த பெறுமதி ரூபா 50 மில்லியன் வரையான ஒப்பந்த உடன்படிக்கைகளில் மாகாணத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர்களாலும் | அங்கீகாரமின்றி உடன்படிக்கைகளில் கையொப்பமிட்ட உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கையொப்பமிடப்பட்டுள்ளது. | |
| | (ii) 8.10.1 ஆம் பிரிவு மற்றும் 8.11.4 (அ)(i) ஆம் பிரிவு | அதிகார சபையினால் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல்கள் அதிகாரசபையின் இணைய தளத்தில் அல்லது ஏனைய பொருத்தமான ஊடகத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டிருக்காததுடன் ஒப்பந்தங்களை கைவிட்டுச் செல்கின்ற வழங்குனர்கள் தொடர்பான தரவு மூலம் பேணப்பட்டிருக்கவில்லை ல. | கடந்த காலப் பகுதியில் இணைய தளத்தில் பிரசித்தப்படுத்துதல் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிகழ்காலத்தில் அது பின்னடைவிற்கு உள்ளாகியுள்ளது. அதனால் எதிர்காலத்தில் இணையதளத்தில் பிரசித்தப்படுத்துவதனை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இத்துறை சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தி தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (உ) | 2023 மே 16 ஆந் திகதிய அமைப/23/0738/607/051 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் | தற்பாழுது நிர்மாண நடவடிக்கைகள் முடிவடைந்துள்ள வீதிகளை உரிய நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அவ்வாறான ஒரு வேலைத் திட்டம் அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை ல. | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரியதல்லாத அனைத்து வீதிகளினதும் நிர்மாண நடவடிக்கைகள் முடிவடைந்திருக்காததனால் உரிய நிறுவனத்திற்கு ஒப்படைத்தல் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | அதிகார சபையின் விடயத்திற்கு உரியதல்லாத வீதிகளின் நிர்மாணத்தினை நிறுத்துவதற்கும் தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதிகளின் கிரயத்தை உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு முறைபபடியாக ஒப்படைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2023 பெப்ரவரி 06 ஆந் திகதிய 23/0256/604/030 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சிற்கான அரசாங்க செலவுகளை மீளாய்வு செய்யும் குழுவின் (PERC) சாதாரண சிபாரிசு | அதிகாரசபையின் கீழுள்ள அனைத்து வீதிகளின் அசைவுகள் சம்பந்தமான தரவுகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த மத்திய தரவுக் களஞ்சியத்தினை ஸ்தாபித்து அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுக்காக தேவையான தரவு அசைவு சம்பந்தமாக எந்தவொரு அரசாங்க நிறுவனத்திற்கும் அணுகுகின்ற இயலுமை வழங்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை | அதற்கு தேவையான முயற்சிகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க அதிகாரசபையின் கீழுள்ள அனைத்து வீதிகளினதும் அசைவுகள் சம்பந்தமான தரவுகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த மத்திய தரவுக் களஞ்சியம் ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இலக்கம் 13 | | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் அதிகாரச் சட்டம் | | | | |
| | (i) | 6(1) ஆம் பிரிவு | உயர் வீதி முறைமைக் கொள்கையை தயாரிப்பதற்கு தந்திரோபாயத்தினை அபிவிருத்தி செய்வதற்கு, வீதி தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் வீதிகளின் பாதுகாப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரசபையினால் அனுப்பிவைக்கப்படுகின்ற வீதித் திட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்காக தோற்றுவிக்கப்பட் வேண்டிய ‘‘வீதி முறைமைகளின் அபிவிருத்தி ஆலோசனை சபை’’ தோற்றுவிக்கப்பட்டிருந்தும் எந்த கூட்டமும் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருக்கவில்லை . | மாவட்ட வீதி முறைமை ஒருங்கிணைப்பு குழு அங்கத்தவர்களாக உரிய உள்ளூராட்சி நிறுவன தலைவர்கள் மற்றும் மாகாண சபையை பிரதிநிதித்துவப்படுத் தும் வகையில் பொதுமக்கள் பிரதி நிதிகள் பெயரிடப்பட வேண்டும் என்பதனால் அந்த நிறுவனத்திற்காக பொருத்தமான பொது மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்ததன் பின்னர் இதில் குறிப்பிட்ட மாவட்ட வீதி முறைமை ஒருங்கிணைப்பு குழுவினை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க நிர்ணயிக்கப்பட்டுள் ளது. | ஆலோசனை சபையை தோற்றுவிக்காது அதிகாரச்சட்டத் தின் 6(2) ஆம் பிரிவின் கீழுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதுச ம்பந்தமாக பாராளுமன்றத்திற் கு ஒரு அறிக்கையினை சமர்ப்பித்து வழங்கப்படுகின்ற ஆலோசனைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | 7(3) ஆம் பிரிவு | மாவட்ட வீதி முறைமையை அபிவிருத்தி செய்யும் ஒருங்கிணைப்பு குழுவின் மூலம் அனைத்து மாவட்டங்களுக்காகவும் மாவட்டத்தின் வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தினை உறுதியாகக் காட்டுகின்ற ஒருங்கிணைந்த வீதி முறைமையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரிப்பதற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை | தேசிய வீதி முறைமையில் அடுத்துவரும் 10 ஆண்டுகள் காலத்தில் புனரமைப்புச் செய்ய வேண்டிய மற்றும் மேம்படுத்தவேண்டி ய வீதிப் பகுதிகள் விஞ்ஞாபன ரீதியான அடிப்படையில் அடையாளங்காணப் பட்டுள்ளது. அதற்கிணங்க பராமரிப்பு/ புனரமைப்புச் | மாவட்ட வீதி முறைமையை அபிவிருத்தி செய்யும் ஒருங்கிணைப்பு குழு தேற்றுவிக்கப்படா து அதிகாரச்சட்டத்தின் 7(3) ஆம் பிரிவின் கீழ் செயற்பாடுகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக பாராளுமன்றத்திற் கு ஒரு அறிக்கையினைச் சமர்ப்பித்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்காது அரசாங்க செலவுகளை மீளாய்வு செய்யும் குழுவிற்கு அதிகாரசபையினால் ரூபா 186.51 பில்லியன் மதிப்பீட்டு கிரயமான ஐந்து ஆண்டுகள் (2023-2027) பராமரிப்பு திட்டம் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக வீதிகளைத் தெரிவுசெய்தல் நிர்ணயிக்கப்பட்டவாறு இடம்பெற்றிருக்கவில்லை. | செய்யப்பட்டட வேண்டிய அதிக முன்னுரிமையுடனா ன தேசிய பெருந்தெருக்கள் தெரிவு செய்யப்பட்டு ஐந்து ஆண்டு (2023-2027) பராமரிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ள து. | வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களு க்கு இணங்க் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2005 நவம்பர் 03 ஆந் திகதி அமைப/05/1711/016/110 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | மீளாய்வாண்டின் இறுதி வரை அமைச்சரவை தீர்மானித்த வீதிகளைப் பராமரிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது வருமான அனுமதிப்பத்திர கட்டணத்துடன் ஒரு வரியினை அறவீடு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட வரைபு அதிகாரச் சட்டத்தினை தேவைக்கு ஏற்ற வகையில் மேலதிகநடவடிக்கைகளுக்காக நிதி அமைச்சின் அரசாங்க நிதிக் கொள்கை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. | அரசாங்க கொள்கைளை நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் வினைத்திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் ஒடுட்டுமொத்த செயற்பாட்டு விளைவுகள் ரூபா 67846.10 மில்லியன் மிகையாக இருந்ததுடன் அதற்கு நெரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 42,903.61 மில்லியனாகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 24,942.49 மில்லியன் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு அதிவேக வீதிகளிலிருந்து பெற்ற தேறிய வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 3,070.11 மில்லியனால் அதிகரித்தல் மற்றும் வட்டி வருமானம் ரூபா 726.94 மில்லியனால் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாதுள்ள ஒட:டுமொத்த கடன் மீதி ரூபா 342,070.13 மில்லியனாக இருந்ததுடன் அது ரூபா 250,904.47 மில்லியன் வங்கி கடன்களையும் ரூபா 91,165.66 மில்லியன் தொகுதிக் கடன்களையும் உள்ளடக்கிள்ளன. 100,000 கிலோ மீற்றர் வீதிச் நிகழ்ச்சித்திட்டம், அதிவேக வீதிகளை நிர்மாணித்தல், பெருந்தெருக்களை விரிவாக்குதலும் மேம்படுத்துதலும் மற்றும் அதிகாரசபையின் தொழிற்பாடு மூலதன தேவைப்பாட்டிற்காக இக்கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் கடனுக்கான வட்டியானது நிறைவேற்றப்பட்ட தொடக்க கடன் பிரிவிற்கு உச்ச அளவாக 02 சதவீதத்திலிருந்து 2.8 சதவீதம் வரையான வீச்சுடைய

பெறுமதி சேர்க்கப்பட்ட வட்டி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த அனைத்து கடன்களையும் பெற்றுக்கொள்ளும் போது திறைசேரி பிணை முறி வழங்கப்பட்டிருந்தது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| **விடயம்** | **தொடர்புபட்ட ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாற்றமடையும் சதவீதம்** | **முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாற்றமடையும் போக்கு** |
|---|---|---|
| மீண்டுவரும் மானியம் | 07 | அதிகரித்தல் |
| மூலதன மானியம் | 58 | அதிகரித்தல் |
| எக்ஸ்பிரஸ்வேயிலிருந்து நிகர வருமானம் | 470 | அதிகரித்தல் |
| அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செலவுகள் | 18 | குறைவடைதல் |

பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல்களுக்காக வரிசை மற்றும் இராஜங்க அமைச்சுக்களினுடாக பெற்ற மானியங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 9,126.51 மில்லியனால் குறைவடைதல், அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செலவுகள் 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைவதற்கு காரணமாக இருந்ததுடன் அதிவேக வீதிகளை நிர்மாணிப்பதற்காகப் பெற்ற மூலதன மானியம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 32,311.32 மில்லியனால் அதிகரித்தல் என்பன மூலதன மானியம் 58 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. மீளாய்வாண்டில் மிகைக்கட்டண வரி ரூபா 1,341.53 மில்லியன், ஆல் வீழ்ச்சியடைதலின் காரணமாக அதிவேக வீதிகளின் நிகர வருமானம் 470 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

| **விகிதாசாரம்** | **2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | **முனடனைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாற்றமடைதல் சாதகமானதா பாதகமானதா** |
|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 0.92 | 1.1 | பாதகமான வீழ்ச்சியடைதல் |
| விரைவு விகிதம் | 0.90 | 1.09 | பாதகமான வீழ்ச்சியடைதல் |
| தேறிய இலாப விகிதம் | 31.28 | 4 | சாதகமான அதிகரித்தல் |
| கடன் உரிமை மூலதன விகிதம் | 37.78 | 0.45 | சாதகமான அதிகரித்தல் |
| மொத்த கடன்- மொத்த சொத்துக்கள் விகிதம் (சதவீதம்) | 25.7 | 36 | சாதகமான அதிகரித்தல் |

- மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை விகிதமும் விரைவு விகிதமும் ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மேற்கூறிய லிகிதங்கள் எதிர்மறையான குறைவடைதலினை வெளிப்படுத்தியது. கிடைக்க வேண்டிய வேலைக்கு முன்னரான முற்பணங்கள் (Mobilization Advence) ரூபா 9,957.01 மில்லியனால் குறைவடைதல் மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 4,491.34 மில்லியனால் அதிகரித்தல் இதற்கான பிரதான காணரமாக இருந்தது.

- மீளாய்வாண்டிற்கான தேறிய இலாப விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 27.28 சதவீத அதிகரிப்பினை வெளிப்படுத்தியிருந்ததுடன் அதற்காக அதிவேக வீதிகளிலிருந்து பெற்ற வருமானம் ரூபா 3,070.11 மில்லியனால் அதிகரித்தல் வட்டி வருமானம் ரூபா 726.94 மில்லியனால் அதிகரித்தல் பிரதான காணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 அடையாளங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டிலிருந்து 2024 சனவரி 31 ஆந் திகதி வரையான காலம் முடிவடையும் வரை அதிகாரசபையில் ரூபா 2.08 மில்லியனை மிகைத்த பண மோசடி இடம்பெற்றுள்ளது என தெரிவுக் கணக்காய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறான பண மோசடியினை தவிர்த்துக் கொள்வதற்காக பற்றுச்சீட்டு வருமானத்தினை பரீட்சிக்கும் நடைமுறை அமுல்ப்படுத்தப்படாததுடன் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற காசார் முறையானது 2011 ஆம் ஆண்டில் தற்காலிகமாக ஸ்தாபிக்கப்பட்ட ஒரு முறைமையாகும். | பணம் செலுத்துகின்ற சந்தர்ப்பத்தில் வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டுக்களை ஒப்பீடு செய்வதற்கான தரவு முறைமையானது ஒட்டு மொத்த அதிவேக வீதி வலையமைப்பிற்கும் இல்லை. | ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியில் இலத்திரனியல் கட்டண அறவீட்டிற்காக 2014 திசெம்பர் 18 ஆந் திகதி அதிகார சபை இலங்கை வங்கியுடன் மேற்கொண்ட உடன்படிக்கையில் உடன்படிக்கை காலம் 2020 யூன் 08 ஆந் திகதியில் முடிவடைந்து 04 ஆண்டுகளை மிகைத்திருந்தும் புதிய உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க உடன்படிக்கை செய்துகொள்ளப்படாது 2020 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை கொடுக்கல் வாங்கல் கிரயமாக மொத்தமாக ரூபா 28.35 மில்லியன் அதிவேக வீதி வருமானத்தில் கழித்தல் கணக்காய்வின் போது சச்சரவான விடயமாகும். | புதிய உடன்படிக்கைக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் உடன்படிக்கை 2024/05/16 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டது. | நி.பி 137 இற்கு இணங்க முறையான உடன்படிக்கை இல்லாது கொடுப்பனவுகளை அங்கீகரித்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அதிகாரசபையின் பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு இணங்க கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியில் இலத்திரனியல் கட்டணம் செலுத்தும் முறைமை | 2023 ஒக்தோபர் 20 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு ETC பயன்படுத்துபவர்களுக்கு | நி.பி 137 இற்கு இணங்க முறையான உடன்படிக்கையின்றி அறவீடு செய்த உத்தியோகத்தர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்துபவர்களை ஊக்குவிப்பதற்காக அறவிடப்படுகின்ற கட்டணத்தில் 10 சதவீத கழிவானது இலத்திரனியல் கட்டணம் செலுத்தும் முறைமைக்கு மாறுகின்ற தொடக்க 06 மாத காலம் வரை அந்த பாவனையாளர்களுக்கு வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் இதன பின்னரும் இக்கழிவு 10 சதவீத எல்லையின் கீழேயே அமுல்ப்படுத்தியதன் காரணமாக 2020 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை மொத்தமாக ரூபா 137.74 மில்லியனை சபை இழந்திருந்தது. | வழங்கப்படுகின்ற 10% கழிவினை இரத்துச் செய்யும் அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்தி ரூபா 767,630 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட 312.6 கி.மீற்றர் அதிவேக வீதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்படுகின்றது. இந்த வீதிகளின் அனைத்து நிருவாக நடவடிக்கைகளும் அதிகாசைபக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் பெலிசாருக்கு வசதிகளை வழங்குவதனை உள்ளடக்கி செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ரூபா 2,000 மில்லியனுக்கு மேற்பட்ட கிரயம் செலவு செய்யப்பட்டிருந்தும் அதிவேக வீதிகளிலுள்ள சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக போதியளவு பாதுகாப்பு வேலைத்திட்டம் தயாரிக்காமையின் காரணமாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதிவேக வீதியிலுள்ள ஆதனங்களை களவாடுதல் மற்றும் சேதப்படுத்துதல் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அச்சேதமடைதல்களின் பெறுமதி ரூபா 913.17 மில்லியனாக இருந்தது. | இருக்கின்ற வசதிகளுக்கு இணங்க தற்பொழுது போதியளவில் வசதிகள் அதிகரிக்கப்பட்டிருந்தும் அதிவேக வீதியிலுள்ள ஆதனங்கள் வீதி நெடுகிலும் பரவிக் காணப்படுவதனால் அந்த ஆதனங்களுக்கு முழுமையான பாதுகாப்பினை வழங்குதல் மிகவும் சிக்கலான விடயமாக உள்ளது. | பாதுகாப்பு வேலைத்திட்டத்திற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதி அபிவிருத்தி காணிகளை அரசாங்கத்தின் காணிக் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் சுதந்திரமான ஒரு மானியமாக அதிகாரசபைக்கு ஒதுக்கீடு செய்வதற்காக 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானித்திருந்தும் அதிகாரசபையினால் பயன்படுத்துகின்ற 935.855 ஏக்கர் காணிகள் மேற்கூறிய தீர்மானத்திற்கு இணங்க அதிகாரசபையினால் பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இன்றுவரை சுதந்திரமான அனுமதிப்பத்திரிங்களின் கீழ் 356 காணித் துண்டுகளுக்காக விண்ணப்பத்திரங்கள் காணி ஆணையாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் இன்றுவரை சுதந்திரமான அனுமதிப்பத்திரங்கள் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. காணி ஆணையாளர் திணைக்களத்துடன் இது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | அமைச்ரவை தீர்மானத்தினை அமுல்ப்படுத்துவதற்கு உரிய பொறுப்புக்களை உறுதியாக ஒப்படைத்து தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி எழுத்துமூல அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் அதிகார சபையிடம் ரூபா 292.55 மில்லியன் பெறுமதியான 26 வாகனங்கள் வெளி நிறுவனங்களுக்கும் அமைச்சிற்கும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனினும் உரிய வாகனங்களை ஒப்படைத்த திகதிகள் மற்றும் பெறுப்பேற்கப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருந்தும் அதிகாரசபையின் கடமைகளுக்காக வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக அதிவேக வீதியின் நிருவாக நடவடிக்கைகளுக்காக மாத்திரம் ரூபா 252.86 மில்லியன் செலவு செய்து வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கெர்ளப்பட்டிருந்தன. | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வாகனங்கள் தொடர்பாக அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் வரிசை அமைச்சு மற்றும் பிரதம மந்திரியின் அலுவலகம் உள்ளடங்கலாக வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் மாத்திரம் அதிவேக வீதிப் பிரிவின் மூலம் வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அப்பிரிவிலுள்ள அனைத்து வாகனங்களும் தேவைப்பாட்டினை நிறைவேற்றும் அளவிற்கு போதியளவு எண்ணிக்கையான வாகனங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் இல்லை. | வெளிநிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்களுக்கு முறையற்ற வகையில் வாகனங்களை ஒப்படைத்துள்ள உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வாடகை வாகனங்களை பயன்படுத்துவதனை குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | ரூபா 347.37 மில்லியன் பெறுமதியான 11 Aggregate Chip Spreaders இயந்திரங்கள் 2010 ஆம் ஆண்டின் போது அதிகாரசபைக்கு சனாதிபதி செயலாற்றல் படையணியினால் | இந்த இயந்திரங்கள் நிறுவனத்தின் தேவைப்பாடு தொடர்பாக முறையாக ஆய்வு செய்யப்படாது பொருளாதார விவகார அமைச்சின மூலம் கொள்வனவு செய்யப்பட்டு | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத இந்த இயந்திரங்களை பொறுப்பேற்று பயன்பாட்டிற்கு எடுத்தக்கொள்ளாது |

| | | |
|---|---|---|
| இறக்குமதி செய்து வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய இயந்திரங்களின் அகலம் 4.2 மீற்றராக இருந்ததன் காரணமாகவும் அந்த அகலம் சாதாரண வீதியின் அகலத்தை விட அதிகமானதன் காரணமாகவும் அந்த இயந்திரங்களின் பெறுமதி 14 ஆண்டுகளுக்குப் பின்னர் ரூபா 4.4 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு கைதவிர்ப்புச செய்வதற்கு 2024 ஆம் ஆண்டின் போது திர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க உரிய இயந்திரம் அதிகாரசபையின் தேவைப்பாடுகளுக்கு பொருத்தமற்றது என தெரிந்து கொண்டு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாது வைக்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் சச்சரவுத்தன்மையானதாகும். | வழங்கப்பட்டிருந்தவைகளா னதுடன் நாடு முழுவதும் காணப்படுகின்ற வீதிகளில் ஓடுவதற்கு இந்த இயந்திரத்தினை பயன்படுத்துவதற்கு முடியாது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை பராமரிக்கின்ற A மற்றும் B தரத்திலான வீதிகளில் தற்பொழுது கல்தார் பரப்புதல் மேற்கொள்ளப்படாததனால் இவைகள் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட திகதியிலிருந்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாதிருந்தது. | வைத்திருந்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஈ) துணைக்கம்பனிகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | அதிகாரசபையின் வரையறுத்த அதிவேக வீதி போக்குவரத்து (தனியார்) கம்பனி 2016 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மகனெகும நிர்மாணங்கள் மற்றும் இயந்திரங்கள் கம்பனியின் 2017 ஆம் ஆண்டிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக மறுப்பு கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது. | வரையறுத்த அதிவேக வீதி போக்குவரத:து (தனியார்) கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 2016-2019 வரை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மகனெகும நிர்மானங்கள் மற்றும் இய்நதிரங்கள் கம்பனியின் 2022 வரையான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கச் சமர்பிபக்கப்பட்டன. | நிதிக்கூற்றுக்களை உரிய காலத்தில் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 133 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு கம்பனியால் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு தடவை பங்குதாரர்களின் | துணைக் கம்பனி களின் பங்குகளின் உரிமை சம்பந்தமான சிக்கல்களின் காணரமாகவும் உரிய காலத்தில் கணக்கு கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படடாமையினா லும் வருடாந்த பொதுக் | கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு அண்டிற்கும் ஒரு தடவையில் பங்குதார்களின் வருடாந்த பொதுக் கூட்டம் நாடாத்தப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையின் அனைத்து கம்பனிகளும் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூட்டம் நடாத்தப்படவில்லை. இன்றுவரை இந்த அனைத்து கம்பனிகளும் கலைத்தல் நடைமுறையில் காணப்பட்டது. | வேண்டும். |
| (iii) | 1981 இன் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் கீழ் ‘‘வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழுள்ள ஒரு பஸ் கம்பனியை செயற்படுத்துவது நோக்கெல்லைக்குரிய விடயம் இல்லாதிருந்தும் பஸ்களை செயற்படுத்துவதன் மூலம் தொடர்பாக செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 100 சதவீதம் அதிகாரசபைக்குச் சொந்தமான கம்பனியாக 2014 ஆம் ஆண்டின் போது அதிவேக வீதி போக்குவரத்து (தனியார்) கம்பனி கூட்டிணைக்கப்பட்டிருந்தது. எனினும் இக்கம்பனி வெற்றியளிக்காமையின் காரணமாக ரூபா 216 மில்லியன் கிரயமான 20 பஸ்கள் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டு கம்பனியை முடிவுறுத்துவதற்கு 2023 மார்ச் 23 ஆந் திகதிய 23/0394/608/033 ஆம் இலக்க அமைச்ரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு பந்தியுடன் இணங்கி கொள்ளப்படுகின்றது. | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் இது தொடர்பாக பரீட்சிப்புக்களை நடாத்தி பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மேல் மாகாண செயற்திட்ட அலுவலகத்தின் கம்பஹா பிரதான பொறியியலாளர் அலுவலகத்தினால் அமுல்ப்படுத்திய 02 ஒப்பந்தங்களுக்கு ஒரே இலக்கத்தைக் கொண்ட வாகனம் ஒரே காலப்பகுதியில் ஓடியது எனக் குறிப்பிட்டு மொத்தமாக ரூபா 5.29 மில்லியன் விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க உரிய விலைப்பட்டியல் போலியானவை என அவதானிக்கப்பட்டதுடன் அந்த விலைப்பட்டியலை சான்றுபடுத்தி அங்கீகரித்த உத்தியோகத்தருக்கு எதிராக நிதிப்பிரமாணம் 156(1), 103(1)(அ) மற்றும் 105 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வவுச்சர்களுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்வது கைவிடப்பட்டதுடன் எதர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளுதல் மற்றும் பெறுகை நடைமுறைகளை வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளுமாறும் மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களை பொறுப்புக்கூற வேண்டியவர்கள் எனக்குறிப்பிட்டு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பிரதான கணக்கீட:டு உத்தியொகத்தரினால் இது தொடர்பாக பரீட்சிப்புக்களை நடாத்தி பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்மபளை பழைய பாலத்திற்கு அருகாமையில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாத வீதிப்பகுதி 2017 ஆம் ஆண்டிலிருந்து தீ.மு ஜயரத்ன மதம் சார்ந்த இனவிருத்தி கட்டிடத் தொகுதியில் பிரசித்தப்படுத்தல் நிலையத்தினை செயற்படுத்துவதற்காக ஒரு கம்பனிக்கு அதிகார சபையினால் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இக்காணிக்காக வருடாந்த குத்தகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கம்பளை பழைய பாலத்திற்கு அருகாமையில் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாத வீதிப்பகுதியின் நிலத்தின் அளவு 819 சதுர மீற்றர் ஆனதுடன் குத்தகை அறவிடப்படாது 2017 ஆம் ஆண்டின் போது அக்கம்பனிக்கு இப்பகுதி ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் குத்தகை அறவீடு செய்வதற்கு மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | புலனாய்வினை மேற்கொண்டு உரிய காணியை ஒப்படைக்கும் போது முறையான நடைமுறையினைப் பின்பற்றி உரிய அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்கிணங்க பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2015,2017 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளின் போது செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவடைந்து அதிகாரசபைக்கு ஒப்படைத்த 06 செயற்திட்டங்களின் மூலம் சுவீகரிக்கப்பட்ட 21,757 காணித்துண்டுகளில் 15,019 காணித் துண்டுகள் தொடர்பான இழப்பீடும் வட்டியுமாக ரூபா 196.24 மில்லியன் | செயற்திட்டம் தொடர்பாக காணிகளைச் சுவீகரிக்கும் உத்தியோகத்தர் உரிய பிரதேச செயலகம் ஆனதுடன் அக்காணிகளை அதிகார சபைக்கு ஒப்படைத்தல் மேற்கொள்ளப்படுலவது | காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளை உரிய காலத்தில் மேற்கொண்டு மேலதிக செலவை குறைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்ததுடன் 982 காணித் துண்டுகள் தொடர்பாக இழப்பீடும் வட்டியுமாக மீளாய்வாண்டின் இறுதியிவரை செலுத்தி முடிவடைந்திருந்த 5,756 அரசாங்க காணித் துண்டுகளுக்கு உரிய இழப்பீட்டினை செலுத்தாதிருப்பதற்கு அதிகாரசபை தீர்மானித்திருந்தது. மேலும் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சுவீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்தமான 21,757 காணித்துண்டுகளில் எந்த காணித்துண்டு தொடர்பாகவும் காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழான சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்தது. | பதிவுசெய்தலின் பின்னராகும். மேற்கூறிய நடவடிக்கையை துரிதப்படுத்தும் நடைமுறைககாக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் 2024 ஆம் ஆண்டு வீதிச் செயற்திட்டங்கள் தொடர்பாக காணிச்சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 44 ஆம்பிரிவின் கீழ் பதிவுசெய்தலினை துரிதப்படுத்தும் ஆண்டாகக் கருதுமாறு அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. | |
| (ஈ) | தெற்கு அதிவேக வீதியில் பின்னதுவயிலிருந்து கொட்டாவை வரை மெதுவான காணிப் பிரதேசத்தினூடாக (Soft Ground Areas) செல்வதனால் 07 ஆண்டுகள் காலத்தின் பின்னர் Asphalt Overlaying செய்தல் மேற்கொள்ள வேண்டும் என அடையாளங்காணப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2024 பெப்ரவரி 09 ஆந் திகதி வரை அச்செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 12 ஆண்டுகள் கடந்துள்ளதோடு தெற்கு அதிவேக வீதியில் கொட்டாவ இலிருந்து கொடங்கொடை வரையான வெளிப்பக்கமாக உள்ள இரண்டு வீதி நிரல்களில் பல பள்ளங்கள் காணப்படுவதனால் முன்னெச்சக்கை ஏற்படுத்தும் தேவைப்பாடு காணப்படுகின்றது. | தொழில் நுட்ப வரையறைகளின் பிரகாரம் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாதீட்டினைத் தயாரிக்கும் போது உரிய நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மகனெகும வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் ஒப்பந்த கம்பனிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,969.46 மில்லியன் தொகை மற்றும் அக்கம்பனியால் அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,240.34 மில்லியன் காணப்பட்டிருந்தும் அது தொடர்பான மீதிகளை உறுதிபபடுத்தும் ஆவணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | மகனெகும வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் ஒப்பந்த கம்பனிகளிடமிருந்து அறவிட வேண்டிய தேறிய தொகையை உறுதிப்படுத்துவதற்காக உரிய கடிதங்கள் அதிகாரசபையினால் உரிய கம்பனிக்கு 2024-05-14 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டது. | மீதிகளை உறுதிப்படுத்தும் ஆவணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதிவரை ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக வாடிக்கையாரடமிருந்து பெற்ற வைப்பு மீதி (Client Deposits) ரூபா 3,119.15 மில்லியனாக இருந்ததுடன் அவற்றில் 05 ஆண்டுகளை மிகைத்து நிறைவேற்றப்படாத 150 ஒப்பந்தங்கள் தொடர்பான மீதி 883.98 மில்லியனாக இருந்ததுடன் 3-5 ஆண்டுகளுக்கிடையே நிறைவேற்றப்படாத 449 ஒப்பந்தங்கள் தொடர்பான மீதி ரூபா 1436.65 மில்லியனாகும். மாகாண அலுவலகங்களுடனான ஒப்பந்தம் தொடர்பான தகவல்களை பரிமாற்றம் செய்தல் தாமதமடைதல் மற்றும் பிதொடர் நடவடிக்கைகளில் காணப்பட்ட பலவீனம் இந்நிலைமைக்கு தாக்கமளித்துள்ளது. | நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் பொருளாதார சிக்கல் நிலைமையைப் போல சந்தையில் மூலப்பொருள் பற்றாக்குறையும் இதற்கு நேரடியாக தாக்கமளித:தள்ளது. எனினும் இன்றுவரை வேலைகளை முடிவுறுத்தாத வாடிக்கையாளரின் செயற்பாடுகளை விரைவாக முடிவுறுத்துமாறும் வேலைகளை முடிவுறுத்திய செயற்திட்டம் தொடர்பான வருமானங்களை அடையதாளங்காணும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. | இது தொடர்பாக பரீட்சிப்புக்களை நடாத்தி நிர்மாண ஒப்பந்த நடவடிக்கைகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் நிறைவேற்றாத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவைின் II ஆம் தொகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பெறுகையின் தன்மைக்கு இணங்க மாவட்டத்திற்கு மாவட்டம் ஒப்பந்த மதிப்பீடு தயாரிக்கப்படாது முறையே 50.கி மீற்றர் மற்றும் 100 கிலோ மீற்றர் எல்லை தொடர்பாக ரூபா 6.33 மில்லியன் மற்றும் ரூபா 12.66 மில்லியன் தொகையான 02 பொறியியலாளர் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் பெறுகையை மதிப்பீடு செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் உரிய மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு HSR விகிதங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறிய செயற்திட்டம் தொடர்பான தேவைப்பாடுகளை அளவீடு செய்யும் நடவடிக்கைகளுக்காக விலை மனுக்களை கோருகின்ற விடயங்களுக்காக பொறியியல் மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு உரிய தகவல்கள் HSR இல் இல்லாததுடன் புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அனைத்து மாவட்டங்களுக்கும் ஒரு பொறியியல் மதிப்பீடு 50 கி.மீற்றர் மற்றும் 100 கி.மீற்றர்களுக்காக தயாரிக்கப்பட்டடுள்ளது. | மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்படுகின்ற விகிதங்களை அங்கீகரித்த நடைமுறைகளுக்கும் இணங்க தயாரிப்பதற்கு மற்றும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் 01 மற்றும் 03 ஆம் பகுதிகளுக்காக ரூபா 36,529.63 மில்லியன் தொகையும் ருவன்புர அதிவேக வீதிச் செயற்திட்டத்திற்காக ரூபா 3,250 மில்லியன் தொகையும் உள்ளகடங்கலாக வேலை ஆரம்பிக்கும் முற்பணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 41,962 மில்லியன் தொகையில் 2023 திசெம்பர் 31 வரை அறவிடாது காணப்பட்ட ரூபா 41,831.56 மில்லியன் நிர்மாண வேலைகள் முடிவடைந்து விலைப்பட்டியல்களிலிருந்து கழிக்க வேண்டியதுடன் அவ்வாறு இல்லையாயின் அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பின்னிணைப்பு (Supplement) 29 இற்கு இணங்க பெற்றுக்கொண்ட முற்பண பிணைமுறிகளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இப்பணத்தை மீள அறவீடு செய்யும் நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது. | ருவன்புர அதிவேக வீதிச் செயற்திட்டத்திற்கான வேலைகளை ஆரம்பிக்கும் முற்பணங்கள் அச்செயற்திட்டத்தின் இறுதி விலைப்பட்டியல்களின் மூலம் தீர்த்துவைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் அந்த விலைப்பட்டியல்களை தீர்த்துவைப்பதற்குத் தேவையான நிதி ஏற்பாடு இந்த ஆண்டிற்குள் இதுவரை கிடைக்காததன் காரணமாக அப்பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் 1 மற்றும் 3 இற்காக வேலை ஆரம்பிக்கும் முற்பணங்களிலிருந்து ரூபா 1,359.86 மில்லியன் அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதிப்பணத்தை இந்த ஆண்டிற்கு அறவீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்கியிருத்தல் வேண்டும். பொறுப்புக்களை செய்யத்தவறிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 100,000 கி.மீற்றர் வீதி செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்காக தெரிவு செய்து பின்னர் இடைநடுவில் நிறுத்தப்பட்ட வீதிகளை ஓடும் நிலைக்கு மாற்றுவதற்கு 2023 சனவரி 30 அந் திகதிய 23/0127 /608/010 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்தும் மதிப்பீட்டுக் கிரயமான 2,891.24 தொகையான 212.30 கி.மீற்றர் புதிய வீதிகளை ஓடும் நிலையில் இல்லாத வீதியின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு தெரிவு செய்தல் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாகும். | பல வீதிகளை போக்குவரத்துக்கு பெருத்தமான நிலைக்கு மாற்றுவதற்கு (Motorable Condition) தெரிவு செய்வதோடு அபிவிருத்தி நடவடிக்கைகளை முடிவுறுத்தாத வீதிகளை முன்னுரிமை அடிப்படையில் திட்டங்களுக்கு இணங்க புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைக்காக தெரிவு செய்யப்பட்டது. | அமைச்ரவை அங்கீகாரத்திற்கு முரணாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன வீதிக் கோவையின் II ஆம் பகுதியின் 48 ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளினால் தயாரிக்கப்பட்ட 2020 சனவரி 14 ஆந் திகதிய மற்றும் 2020 நவம்பர் 26 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.5 ஆம் வழிகாட்டிக்கு வழங்கப்பட்ட பிற்சேர்க்கை 39 இற்கு இணங்க ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கக்கூடிய ஒப்பந்த பெறுமதிகளின் எல்லைகள் ஆகக் குறைந்தது ரூபா 75 மில்லியனிலிருந்து உச்ச அளவு ரூபா 300 மில்லியன் வரையான நியாயமற்ற வீச்சில் அதிகரிக்கச் செய்வதற்கு வேண்டுதல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அமைச்சரவை அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய CIDA தரம் மற்றும் ஒப்பந்தம் வழங்கல் பெறுமதியை மாற்றுவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர் CIDA நிறுவனத்தின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒப்பந்தக்காரர்களின் இயலுமை மற்றும் ஒப்பந்த பெறுமதிகளின் கட்டுப்பாடுகள் இச்செயற்திட்டத்திற்காக மாத்திரம் ஆன வகையில் அதிகரிக்கச் செய்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. | CIDA தரத்தினையும் ஒப்பந்த பெறுமதியையும் திருத்தம் செய்வதற்கு CIDA நிறுவனத்தின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஊ) | 2020 சனவரி 14 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3.5(உ) பிரிவின் பிரகாரம் 100,000 கி.மீற்றர் வீதிச் செயற்திட்டத்தின் கீழான அனைத்து வீதிகளின் வேலை ஒப்பந்தங்களுக்கான கொடுப்பனவு, Milestone கொடுப்பனவுகளை அடிப்படையாகக் கொண்டு வெளியீடுகளின் அடிப்படையில் (Milestone Delivery Modle) மேற்கொள்ளப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டது. இக்கொடுப்பனவு முறைமையானது அதிக தொழில்நுட்ப தேவைப்பாடுள்ள செயற்திட்டங்களுக்காக (Turnkey) ஈடுபடுத்தப்படுகின்ற ஒரு முறைமையானதுடன் மதிப்பீட்டினை தயாரிக்க கூடிய வீதி நிர்மாணங்களக்கான வழக்கமாக பயன்படுத்தப்படாத ஒரு முறைமையாகும். மேலும் | 100,000 கி.மீற்றர் செயற்திட்டத்தினை Lump Sum நடைமுறையின் கீழ் அமுல்ப்படுத்ததல் தொழில் நுட்ப அறிவுடைய ஒரு குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. ஒரே தடவையில் பணத்தை கொடுப்பனவு செய்யும் முறைமையினூடாக (Lump sum) நிதி நிருவாகம் மிகவும் இலகுவானதுடன் வேலைத்தளத்தில் அவதானிக்கப்படுகின்ற செயற்பாடுகளுக்குரியதான அனைத்து அதிகரித்தல்களும் ஒப்பந்தக்காரர்களினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மேலும் | Standard Bidding Document Procurement of work Design and Build Contracts (CIDA/SBD/04) இன் பிரிவு இலக்கம் 4.1 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்காத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவிற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய |

| | | | |
|---|---|---|---|
| | Stanpard Bidding Document Procurement of work Design and Build Contracts (CIDA/SBD/04) இன் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த முறைமையின் கீழ் ஒரு ஒப்பந்தத்தை வடிவமைத்தல், அமுல்ப்படுததுதல் மற்றும் பூரணப்படுத்துதல் ஒரு ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அச்செயற்திட்டத்திற்காக வடிவமைத்தல் (Design) தொடர்பற்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க இம்முறைமையானது பூரணமாக பின்பற்றப்பட்டிருக்க வில்லை. மேலும் இந்த முறைமையின் கீழ் ஒப்பந்தத்தை வழங்குதல் இடம்பெற்றிருந்தும் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் சம்பந்தமாக பணக் கொடுப்பனவுகளை நிர்மாணிக்கும் போது மீண்டும் அளவீடு செய்து கொடுப்பனவு செய்யும் (Measure And pay) பின்பற்றவேண்டி ஏற்பட்டிருந்தது. | இச்செயற்திட்டம் பெரிய அளவிலான ஒரு செயற்திட்டம் என்பதனால் அனைத்து செயற்திட்டங்களையும் அளவை செய்து கொடுப்பனவு செய்வதற்கு அதிககாலம் தேவையானதாகும். இந்த நடைமுறையினைப் பின்பற்றுகின்ற செயற்திட்டங்களில் காணப்படுகின்ற இடர்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒப்பந்தக்காரர்களால் தாங்கிக்கொள்ளுதல் வேண்டும். பொறியியலாளர் மதிப்பீட்டுப் பெறுமதி மாத்திரம் ஒப்பந்தக்கார்களுக்கு வழங்கப்பட்டு அதற்காக போட்டிக் கழிவுப் பணம் பெற்றுக்கொள்ளுதல் பின்பற்றப்பட்ட நடைமுறையாகும். | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1)(இ) பந்தியின் கீழ் மீளாய்வாண்டின் போது இத்துறை சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தி தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி எழுத்து மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (எ) | 100,000 கி.மீ வீதி செயற்திட்டத்தின் மூலம் ஒப்பந்த பெக்கேஜ் தொடர்பான பொறியியலாளர் மதிப்பீட்டினை கேள்வி மனுதாரர்களுக்குச் சமர்பபித்து அதற்காக உச்ச அளவு கழிவினை வழங்கும் முறைமைபின்பற்றப்பட்டிருந்தது. அதற்கிணங்க தெரிவு செய்த 24 ஒப்பந்த பெக்கேஜ்களுக்காக உரிய கேள்வி மனுதாரர்களினால் வழங்கப்பட்டிருந்த கழிவுகளின் அளவு 0.19 சதவீதத்திருந்து 13.56 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. பொறியியலாளர் மதிப்பீட்டினை சரியாக தயாரிக்காமையின் காரணமாக 09 மாகாணங்களின் மூலம் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான மதிப்பீட்டுப் பெறுமதி 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 3,484 மில்லியனால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க உரிய பொறியியலாளர் மதிப்பீட்டினை பிரசித்தப்படுத்தாது | அரசாங்க கணக்காய்வு உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் மதிப்பீட்டினை மீண்டும் பகுப்பாய்வு செய்யுமாறு உரிய மாகாணத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. ஒப்பந்தத்தை வழங்கும் போது ஒவ்வொரு விடயத்திற்குமான பெறுமதிகளை ஒப்பந்த கம்பனிக்கு வழங்குல் இடம்பெறாததனால் அந்த வீதிகளை நிர்மாணிப்பதற்கு செலவாகின்ற ஆக்குறைந்த கிரயத்தினை முழுமையான மதிப்பீட்டுத் தொகையுடன் ஒப்பீட்டுப் | பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது பிழையான பொறியலாளர் மதிப்பீட்டின் அடிபபடையில் நடவடிக்கை எடுத்தல் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விலை மனுக்களை கோருவதினூடாக ஒப்பந்தக்காரர்களைத் தெரிவுசெய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் நிறுவனத்திற்கு கழிவுகளின் மூலம் தகமை பெறுகின்ற பிரதிபலன்களை விட அதிக சாதகமான நிலைமை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. | பார்த்ததன் பின்னர் அச்செயற்திட்டத்திற்கான கழிவுப் பணத்தை வழங்குதல் இடம்பெறும். ஒப்பந்தம் வழங்கப்பட்டு உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளதனால் அதனை மாற்றம் செய்வதன் மூலம் மேலதிக கொடுப்பனவுகள் (Contractual Claim) இற்காக ஒப்பந்தக்காரர்கள் தொடர்புகொள்ளக்கூடியதாக இருந்ததுடன் அவ்வாறு இல்லையாயின் ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டி ஏற்படுகின்ற பணத்தின் அளவு அதிகரிக்கும் | |
| (ஏ) | 100,000 கி.மீற்றர் வீதிச் செயற்திட்டத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகளுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 40,651.55 பெறுமதியான திறைசேரி பிணைமுறிகள் விடுவிக்கப்பட்டிருநதன. அப்பிணைமுறிகள் விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பம் வரை செயறதிட்டத்தினால் வெளித்தரப்பினர்களுக்கு கொடுப்பனவு செய்ய வேணடியுள்ள பெறுமதிகள் (கடப்பாடுகள்) சரியாக கணிப்பீடு செயயப்பட்டிருக்காததன் காரணமாக 11 சந்தர்ப்பங்களின் போது 09 ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வழங்கப்படடிருந்த ரூபா 121.17 மில்லியன் தொகையான திறைசேரி பிணை முறிகளுக்குச் சமமான தொகை பின்னர் செயற்திட்டத்திற்கு உரிய ஒப்பந்தக்காரர்களால் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அப்பெறுமதிக்குரிய திறைசேரி உடன்படிக்கைகளுக்காக அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட வட்டி மற்றும் கழிவு செய்யப்பட்ட முகப்பெறுமதி அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டமாகும். | மாகாண அலுவலகங்களினால் அனுப்பிவைக்கப்பட்ட சில விலைப்பட்டியல்கள் மீண்டும் திருத்தம் செய்யப்பட்டதுடன் அதற்கிணங்க உரிய வித்தியாசத்திற்காக அறவிட வேண்டிய பணத்தை அச்சந்தர்ப்பத்தின் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | பொறுப்புக்களை சரியாக கணிப்பீடு செய்யாத உத்தியோகத்தர்களள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 2020 பெப்ரவரி 13 ஆந் திகதிய அமைப/20/0142/221/005 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2020 சனவரி 14 ஆந் திகதிய 2020/01 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கு இணங்க 100,000 கி.மீற்றர் வீதிச் செயற்திட்டத்தின் கீழ் வீதிகளைத் தெரிவுசெய்யும் போது புள்ளிகள் வழங்க வேண்டிய ஒழுங்குமுறைமைக்கு இணங்க 40 புள்ளிகள் வரம்பினை மிகைத்து பெற்றுக்கொள்கின்ற வீதிகள் முதலாம் கட்டத்தில் தெரிவு செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும் மேல் மாகாண செயற்திட்ட அலுவலகத்தின் மூலம் ரூபா 1,826 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட வீதியனைத் தெரிவுசெய்யும் போது அவ்வாறான புள்ளிகள் வழங்கும் நடைமுறை பின்னபற்றப்பட்டிருக்காததுடன் செயற்திட்ட குறிக்கோள்களுக்குப் புறம்பாக பாடசாலைகளின் உள்ளக வீதிகள், திறந்த வெளி நிலையங்கள், பூங்காக்கள், பள்ளிவாசல், கோயில், வீடமைப்பு தொகுதிகள் பொலிஸ் நிலையங்கள் இராணுவப்படை முகாம்கள் என்பவற்றிக்குரிய பொது இடங்கள் மற்றும் அந்த நிறுவனங்களின் உள்ளக வீதிகள் ஆகிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 100,000 வீதிகள் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் போது செயற்திட்டத்தின் வீதிகளை தெரிவு செய்வதற்கு புள்ளிகள் வழங்கும் நடைமுறை அமுல்ப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க புள்ளிகள் வழங்கும் நடைமுறையின் மூலம் 40 புள்ளிகளுக்கு மிகையாக உள்ள வீதிகளுக்காக முன்னுரிமை வழங்கி அச்செயற்திடடத்திற்கு அமைச்சு பெறுகைக் குழுவினூடாக பெறுகை நடைமுறை மேற்கொ்ளபப்பட்டு ஒப்பந்தத்தை வழங்குதல் இடம்பெற்றதுடன் 40 புள்ளிகளுக்கு குறைந்த அத்தியவசியமான மற்றும் பொருளாதார சமூக ரீதியாக முக்கியமான வீதிகள் நேரடி வேலையாட்களின் கீழ் அபிவிருத்தி செய்தல் மேற்கொள்ளப்பட்டது. | அமைச்ரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட வரையறைகளை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது வீதிகளை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரமளித்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் II ஆம் பகுதியின் 48 ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2008 ஒக்தோபர் 07 ஆந் திகதி அதிகாரசபையின் நிதி, பணிப்பாளரினால் வழங்கப்பட்ட நிதி அதிகாரத்தினை பகிர்ந்தளிப்பதற்கும் கடிதத்தின் பிரகாரம் இச்செயற்திட்டத்தின் பணிப்பாளருக்கு காசோலைகளில் கையொப்பமிடும் நிதி வரம்பு ரூபா 10 மில்லியனாகும். எனினும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரீட்சிப்பின் போது 2023 சனவரி மாதத்திலிருந்து 2023 மே 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 95 ஒப்பந்த விலைப்பட்டியல்கள் | ரூபா 10 மில்லியனுக்கு மிகைத்து செல்லுகின்ற கொடுப்பனவுகளுக்குரிய காசோலைகளில் கையொப்பமிடுவதற்காக அந்த நிதி எல்லைகளுக்குரிய உத்தியோகத்தர்கள் இருக்கின்ற தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியதுடன் இதன் காரணமாக அக்காசோலைகளுக்காக கையொப்பம் | உத்தியோகத்தரினால் இது தொடர்பாக பரீட்சிப்புக்களை நடாத்தி நி.பி 135 இற்கு இணங்க முறையான நிதி அதிகாரத்தினை பின்பற்றாத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 08 |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக ரூபா 1,572.31 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி முழுவதனையும் செலுத்துவதற்காக ரூபா 10 மில்லியனை விட குறைந்த பெறுமதியைக் கொண்ட 250 காசோலைகள் வழங்கப்பட்டிருந்ததன. அதற்கிணங்க செயற்திட்ட பணிப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகார எல்லையினை மிகைக்காத வகையில் செலுத்த வேண்டிய பெறுமதியினை சிறிய பெறுமதிகளாகப் பிரித்து காசோலைகளில் கையொப்பமிடப்பட்டிருந்தது. | இடுவதற்காக அதிக காலதம் காத்திருக்க வேண்டி ஏற்படும். இத்தாமதத்தினை தவிர்த்துக் கொள்வதற்காக சில சந்தர்ப்பங்களில் ரூபா 10 மில்லியனை விட குறைந்த காசோலைகள் வழங்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | நிர்மாணப் பாதுகாப்பு நிதியத்தினால் நிதிரீதியாக பலஹீனமான ஒப்பந்தக்காரர்களுக்கு பிணைவைத்தல் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கிணங்க 100,000 கிலோ மீற்றர் வீதிச் செயற்திட்டம் தொடர்பாக 22 ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வேலைகளுக்கு அறவிட வேண்டிய ரூபா 259.26 மில்லியன் தொகையை அறவீடு செய்வதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன் உரிய பெறுமதியினுள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செயற்படும் ஆரம்பிக்காத 09 ஒப்பந்த பெக்கேஸ்கள் தொடர்பாக ரூபா 115.94 மில்லியன் தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | தற்பொழுது இதில் குறிப்பிட்ட வேலைகளுகட்கு முன்னரான முற்பணங்களுக்கு முன்னரான முற்பணங்களுக்காக செலுத்தப்பட்ட பணத்தில் தீர்த்துவைக்க வேண்டியிருந்த பணமான ரூபா 115.95 மில்லியன் தொகையானது ரூபா 52.73 மில்லியன் வரை குறைவடைந்துள்ளது. மிகுதியை அறவீடு செய்வதற்காக உள்ள பணம் உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு 100,000 கிலோ மீற்றர் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு ஏனைய செயற்திட்டங்களின் மூலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை நிபந்தனைகளைகளை மீறுகின்ற ஒப்பந்தக்காரர்களின் அறவீடு சம்பந்தமாக செயலாற்றல் பிணைமுறிகளை காசாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | 100,000 கிலோ மீற்றர் வீதிச் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தும் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான நிதி வசதிகள் வழங்குதல், அனுபவமும் ஆற்றலுமுள்ள ஒப்பந்தக்காரர்களைத் தெரிவுசெய்தல் மற்றும் | நாட்டில் உருவாகியிருந்த பொருளாதார சிக்கல் நிலைமையின் காரணமாக 2022 ஆம் ஆண்டின போது இச்செயற்திட்டத்தின் வேலைகளை முடிவுறுத்துவதற்கு திர்மானிக்கப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதிவரை | அதிகாரசபையின் விடயத்திற்குரியதல்ல ாத வீதிகளின் நிர்மாணங்களை மேற்கொள்ளாதிருக்க வேண்டியதுடன் தற்பொழுது பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதிகார சபைக்குரியதல்லாத வீதிகளை உரிய |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்திற்காக மூலப்பொருட்களை தேடிக்கண்டுபிடித்தல் ஆகிய சிக்கல்கள் காணப்பட்டதன் காரணமாக அபிவிருத்தி நடவடிக்கைகள் கி.மீற்றர்களில் 11,549 கிலோ மீற்றர்கள் ஆரம்பிக்கப்பட்ட 17847 இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. வீதிகளை நிர்மாணிப்பதற்காக செயற்திட்டத்தினால் மீளாய்வாண்டின் இறுதி வரை மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ரூபா 167,305 மில்லியனாக இருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தின் வேலைகளை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த விலைப்பட்டியல்களின் பெறுமதி அடையாளங்காணப்டிருக்கவில்லை . | ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்களின் பெறுமதி அடையாளங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | 2020 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வயையான காலப்பகுதியில் அதிகாரசபையினால் நிர்மாண பாதுகாப்பு நிதியத்திற்கு ரூபா 32,553.12 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தில் ரூபா 224.2 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதிவரை உரிய நிதியத்தின் மூலம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. மேலும் 212 ஒப்பந்தங்கள் தொடர்பாக ரூபா 1,492.82 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட திறைசேரி பிணை முறிகள் மற்றும் ரூபா 29.94 மில்லியன் விலைப்பட்டியல்களுக்கான கொடுப்பனவுகள் நிதியத்திற்குப் புறம்பாக நேரடி ஒப்பந்தக்காரர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 29.94 மில்லியனான விலைப்பட்டியல்யல்கள் போலியானவை என அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | தொடக்க புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) மூலமும் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அப்புலனாய்வின் பெறுபேறுகளின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது இடம்பெறுகின்ற கொடுப்பனவுகளின் போது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. | ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டினை ஸ்தாபிப்பதற்கும் ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக புலனாய்வினை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கா) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் தொடர்புபட்ட 5.3.4 ஆம் பிரிவிற்கு இணங்க 100,000 கிலோ மீற்றர் வீதிச் செயற்திட்டத்தின் தொடக்கத்தின் போதே நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் அமுல்ப்படுத்தப்படுகின்ற 50 கி. மீற்றர் மற்றும் 100 கி.மீற்றர்வீதிகளின் நீளப்பக்கமாகவும் குறுக்குப் பக்கமாகவும் அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக (Lengitudinal & Cross Section Survey) தனியார் கம்பனிகளுக்கு மொத்தமாக ரூபா 79.26 மில்லியன் தொகையான 50 கி.மீற்றர்களின் 10 ஒப்பந்தங்களும் மொத்தமாக ரூபா 121.45 மில்லியன் தொகையான 100 கி.மீற்றர்களின் 08 ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அந்த ஒப்பந்தங்களை வழங்கும் போது உரிய ஒப்பந்த நிறுவனத்திடம் அவற்றிற்குத் தேவையான உபகரணங்கள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பான மதிப்பீடானது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும் உரிய ஒப்பற்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தங்களின் அளவானது ஒட்டுமொத்த அளவீடுகளானது 2975 கி.மீற்றர்களில் 44 சதவிதமாக இருந்தது. | அளவீட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான உபகரணங்களுக்குத் தேவையான உபகரணங்களின் பட்டியல் மற்றும் அளவீட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட ஆளணியினரின் தகமைகள் தொடர்பாகவும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளதுடன் அவற்றினை அடைந்துள்ள முறைமை தொடர்பாக போதியளவான தன்மை மற்றும் தரமான தன்மையினை பதிப்பீட்டிற்கு உட்படுத்தியதன் பின்னர் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு முரணாக ஒப்பந்தங்களை புதுப்பிப்பது மற்றும் வழங்குதல் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளங்கண்டு முறையான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (கி) | இலங்கை அரசாங்கம் கொரிய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வங்கியுடனான இணக்கப்பாட்டின் அடிப்படையில் அமெரிக்க குடியரசு டொலர் 199.27 மில்லியன் கடன் கண்டி சுரங்கப்பாதையை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக வழங்குவதற்கும் அக்கடனைப் பெற்றுக்கொள்ளும் திகதியிலிருந்து 05 ஆண்டுகள் காலத்திற்குள் வேலைகளை முடிவுறுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. உரிய கடனை பெற்றுக்கொள்வது | சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தொடர்பான அங்கீகாரத்தினை வழங்குவதற்காக தேவையான நடைமுறைகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் (CEA) மூலம் தற்பொழுது அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. மீள் குடியர்த்தல் திட்டம் (RAP) அதனை | சுற்றாடல் ஆய்வு அறிக்கையின் செயற்பாடுகளை பூர்த்தி செய்ததன் பின்னர் தேசிய அபிவிருத்தி திட்டத்திற்குள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சமபந்தமாக எழுத்து மூலமான உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு முன்னர் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினைப் (EIA) பெற்று அதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரதத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் மீளக்குடியமர்த்தும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 95.75 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரிக்கும் ஒப்பந்தம் பேராதனை பல்கலைக்கழக்கத்திற்கு 2021 மார்ச் 25 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் மீளக்குடியமர்த்தும் செயல் நடவடிக்கை திட்டத்தினை தயாரிக்கும் ஒப்பந்தம் ஒரு தனியார் கம்பனிக்கு 2022 ஒக்தோபர் 04 ஆந் திகதி ரூபா 8.47 மில்லியனுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 88.11 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தும் உரிய செயற்பாடுகள் முடிவடையாதிருந்ததுடன் உரிய செயற்திட்டத்தின் நடவடிக்கைகளும் முடிவுறுத்தி அப்போது வரை காணப்பட்ட பொறுப்புக்களை தீர்த்துவைப்பதற்கு National Operating Room தீர்மானித்துள்ளதனால் அது பற்றி உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு அறிவிப்பதற்கு 2023 திசெம்பர் 19 ஆந் திகதி நடைபெற்ற பெருந்தெருக்கள் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க உரிய செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயம் விளைவற்ற செலவு என அவதானிக்கப்பட்டது.

பொறுபேற்ற கம்பனியின் மூலம் 90% வீதம் அளவானவை முடிவுறுத்தபட்டுப்பட்டுள்ள துடன் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைக்கு (EIA) அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளும் வரை அதனை தாமதிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

.

## 3.5 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட அங்கீகரித்த ஆளணியினர் 9,602 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஆளணியினர் 9,838 ஆகும். அதற்கிணங்க ஊழியர் பற்றாக்குறை 620 ஆகும். மிகைகள் 857 ஆகவும் இருந்ததுடன் அங்கீகரித்த ஆளணியினரை பேணுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகரித்த ஆளணியினர் 9602 என்பதும் உள்ளபடியான ஆளணியினர் 9838 என்பதுவும் சரியானதுடன் ஊழியர் பற்றாக்குறையினை 620 ஆகவும் மிகைகளை 857 ஆகவும் சரிசெய்தல் வேண்டும். | ஊழியர் தேவைப்பாட்டிற்கு இணங்க அங்கிகரித்த ஊழியர்களை பேணுவதற்கு கணகச்கீட:டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிவேக வீதி செயற்பாடுகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் ஆளணியர்களுக்காக நிர்வாகப் பிரிவினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவிகளின் எண்ணிக்கை 81 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் அப்பிரிவுகளில சேவையில் ஈடுபட்ட உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை 149 ஆகும். அதற்கிணங்க அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கையை மிகைத்து 68 ஊழியர்கள் உரிய பிரிவுகளில் சேவையாற்றுக்கின்றார்கள் என அவதானிக்கப்பட்டது. மேலும் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் காசாளர்கள் மற்றும் காவாளர்களாக நியமனங்களை பெற்ற எனினும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் தற்காலிகமாக சேவையாற்றுகின்ற 24 ஊழியர்கள் உரிய நிரந்தர பதவிகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அதிவேக வீதி செயற்பாடுகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவு பிரிவிற்காக அங்கீகரித்த முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை 81 ஆக இருந்த போதிலும் அது போதியளவாக இல்லாததுடன் செயற்பாட்டு நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்வதற்கு முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக தகமைகளைப் பெற்றுள்ள காசாளர்கள் மற்றும் காவலாளர்கள் சிலதையும் தற்காலிகமாக முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன. | அங்கீகரித்த ஆளணியினர் எண்ணிக்கைக்கு மிகையாக ஊழியர்களை சேர்த்துக்கொண்ட உத்தியோகத்தர்களை அடையாளங்கண்டு தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் நட்டத்தை நிதிப்பிரமானத்தின் பிரகாரம் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கொள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அதிகாரசபையினால் 2023 ஆம் ஆண்டிற்காக தயாரித்த வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளக் கூடியவகையில் ஒரு வேளைத்திட்டம் உருவாக்கப்பட்டிருக்காததுடன் அதிகாரசபையினால் அடையாளங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள செயற்திட்டங்கள் என்ன என்பதுவும் அவை தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி குறிக்காட்டிகளும் (SDG Indicators) மீளாய்வாண்டின் போது அந்த குறிகாட்டிகளிலிருந்து எதிர்பார்த்த செயலாற்றல் போன்ற வரையறைகள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2030 ஆம் ஆண்டு வரை நிலைவேற்றுவதற்கு எதிர்பார்த்த நிலைபேறான குறிக்கோள்கள் எவை என்பதும் அடையாளங்காணப்பட்டிருக்கவில்லை. | வீதி அபிவிருத்தி அதிகார சபை தொடர்பாக அடையாளங்காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் 2030 ஆம் ஆண்டிற்காக எதிர்பார்த்த குறிக்கோள்களுக்கு இணங்க திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் உரிய நிலைபேறான குறிகாட்டிகளும் அவற்றின் எதிர்பார்த்த வருடாந்த செயலாற்றல்களையும் உள்ளடக்கிய செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலைபேறுகளை அபிவிருத்தி குறிக்கோள்களை திட்டத்திற்கு இணங்க நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |